கடல்போல் ஓசைப்பட்ட அழுகுரல் ஒன்றும் ராவணன் காதில் விழவில்லை. தலைவிரி கோலமாகி அழுது சோர்ந்த தானியமாலையையோ, அவளை ஊர்வசியும் மேனகையும் அணுகி அணைத்துக் கொண்டு போனதையோ கண்கள் பார்க்கவில்லை. மானுடர் இருவரையும், கூனுடைக் குரங்கையும், அங்கே கும்பிட்டு நின்ற தம்பியையுமே அகக்கண் இமையாது பார்த்துக் கொண்டிருக்கிறது. 'வேணுமானால், நீயும் அங்கே போ!' என்று கும்பகர்ணனுக்குக் காட்டி ஆத்திர மூட்டிய அதே காட்சி.



சித்திர ராமாயணம்

காவியத்துள் ஒரு வீர காவியம்

பி.ஸ்ரீ

அழுத கடலோசை வேறொருவன் செவியில் தாக்கி, விண்ணுலகைக் கலக்கிய வீராவேசத்தை உசுப்பி விடுகிறது. ரதம் இமைப்பொழுதில் ராவணனுக்கு எதிரே வந்து நிற்கிறது. அதிலிருந்து குதிக்கிறான் ராமாயண மா காவியத்துள்ளே தனக்கென ஒரு வீர காவியம் படைத்துக்கொண்ட தனி வீரன்.

ராமாயண காவியத்திலே ராமனுக்கு ஓர் 'அராம'னாக ராவண வீரனைப் படைத்துக் காட்டிய பெருமை வால்மீகிக்கு உரியது. இந்தப் பிரதாப லங்கேச்வரனும் ராமனும் ஒரு நேர் கோட்டின் இரண்டு எல்லைப் புள்ளிகள். கம்பன் ஒரு மூன்றாம் புள்ளி வைத்து வீர முக்கோணப் படம் ஒன்று வரைந்து காட்டியுள்ளான். இம் மூன்றாம் புள்ளிதான் இந்திரஜித்து.

தமிழர் வீரத்தின் எல்லைப்புள்ளி முருகக் கடவுள். இந்த எல்லையில் இந்திரஜித்தையும் ஏற்றி வைத்துப் பார்க்கிறது கவி மேதையென்றால், இவன் கதை ஒரு தனிக் காவியம் தானே!

இந்த வீரனை நாம் பார்ப்பதற்கு முன்பே இவனது வீரப்பிரதாபம் காதில் விழுந்து 'அவனைப் பார்க்க வேணுமே' என்ற ஆத்திரத்தைத் தூண்டிவிடுகிறது.

'ஆரணிய காண்ட'த்தில் அங்கபங்கப்பட்டு அலறுகிறாள் சூர்ப்பணகை. துன்பக் கடலுள் சிக்கிய பக்தன் 'முருகா! ஓ முருகா!' என்று கதறுவது போல், 'மருகா, ஓ! மருகா, ஓ!' என்று ஆர்ப்பரிக்கிறாள். 'இந்திரனை இரு காலிலும் விலங்கிட்டு உன் மாளிகை வாசலில் கட்டி வைத்திருந்த மருகா! மானுடவர் வலி காண வாராயோ?' என்று கூவி யழைக்கிறாள்.

இவ்வளவு வேகத்தில் அறிமுகமாகும் இந்திரஜித்தை மகா வீரனும் ஞானியுமான அனுமன் கண்களாலேயே பார்க்கிறோம். அனுமனுக்கும் ஆளைப் பார்ப்பதற்கு முன் வீரப்பிரதாபம் தான் காதில் விழுகிறது.

இந்திரனைச் சிறை வைத்திருந்த வாசல் வழியாகத்தான் சென்று கொண்டிருக்கிறான் அனுமன். என்ன காவல்! எவ்வளவு விழிப்பாக இருக்கிறார்கள். ஏதோ உரையாடிக் கொண்டிருக்கிறார்

கள். பற்கள் இலங்கப் புன்னகையுடன் பேசு கிறார்கள்; சிரித்துப் பேசுகிறார்கள். புதிர்கள் போடுகிறார்கள். ஏதேதோ பழைய கதைக ளும் சொல்லுகிறார்களே! புகை புகாத இடங் களிலும் புகுந்து பார்க்க வல்ல அனுமன் தன் சூட்சும வடிவில் நின்று கவனிக்கிறான்.


பெரிய முரட்டுக் கைகளில் ஆயுதங்களை ஏந்திய வண்ணம், திக்விஜய காலத்துப் போர்க் களங்களின் நினைவுகள் அலை வீச நகையாடி உரையாடுகிறார்கள்.

அந்தப் போர்களிலே விளைத்த வீரம் என்ன!— அந்த வெற்றி வெறி தான் என்ன! இந்திரஜித்தின் தலைமையில் நடத்திய அந்தப் பழைய போராட்டங் களைக் குறித்துக் கதை கதையாகப் பேசிக் கொண் டிருப்பவர்களுக்குத் தான் என்ன கோப வெறி அந்தப் போர் நினைவுகளிலேயே! இந்த வெறியர்க ளின் காவலைக் கடந்து சென்றவன் உள்ளே உறங் கிக் கொண்டிருக்கும் இந்திரஜித்தைப் பார்த்து விடுகிறான்.

ராவண புத்திரன் என்று தெரிந்து கொள்ள வில்லை; 'சிவ குமாரனோ!' என்றே பிரமித்துப் போகிறான். அறுமுகக் கடவுள் சில தலைகளையும் கைகளையும் மறைத்துக் கொண்டு உறங்குவது போலத் தோன்றுகிறதாம்.

சற்று நெருங்கிப் பார்க்கும்போது 'ராவணன் தானோ!' என்று சந்தேகிக்கிறான் இந்த ராவண குமாரனை.

'மிருகேந்திரனான சிங்கம் தன் குகைக்குள்ளே நிம்மதியாய்ப் படுத்திருப்பது போலக் கிடக் கிறானே, யாரோ? அறியேன்' என்கிறான்.



'இந்த வீர சிங்கம் யாரானுலும் சரி, லட்சுமணனுக்குத் தொல்லைதான் போர்க்களத்திலே!' என்று நினைக்கிருன். இளைய வீரனுக்கு மட்டுமா? — ராமனுக்கும்தான் எவ்வளவோ மன உளைச்சல் ஏற்படக் கூடுமே!

இளைய வீரனும்,
ஏந்தலும் இருவரும்
பலநாள்

உளைய உள்ளபோர்
இவனெடும் உளதென
உணர்ந்தான்.

[ஏந்தல் - ராமன்.]

அனுமன் இந்த மாளிகையை விட்டுப் போகும் போதும், தலை வாசல் - காவலாளிகள் பழைய போர்களைக் குறித்தும், அந்தப் போர்களில் தங்களை வெற்றி பெறச் செய்த தலைவனைக் குறித்தும் பேசிக் கொண்டுதான் இருக்கிருர்கள்.

கையிலுள்ள படைக்கலம் போல் களத்தில் எப்போதும் உதவியவன் இந்திரஜித்து. போர்முனையில் கண்ணாக உதவினுன்; கவசமாக உதவினுன்; உயிராக உதவினுன். இந்தத் தலைவனுக்காக எந்தத் தியாகம் தான் பெரிது, அரிது!

அனுமனுடன் போராடி அட்சகுமாரன் பயங்கரமாய் வதைக்கப்பட்ட அந்தக் களத்தைக் கண்ணுற்றதும், இந்திரஜித்து தம்பிக்காக இரங்குவதற்கு முன்பு, மாண்டு கிடந்த படைவீரர்களுக்காக வருந்துகிருன். 'இப்படை வீரர்களே எனக்குக் கைப் படை; எனக்குக் கண்; எனக்கு உயிர்' என்று சொல்லுகிருன்.

கண்ணனுர், உயிரே
ஒப்பார், கைப்படைக்
கலத்திற் காப்பார்!

இப்படியெல்லாம் சாதாரணப் படைவீரர்களுடனும் தோழமைபூண்ட இந்திர



ஜித்தனுக்காக அவர்கள் உயிர் கொடுக்க முன் வந்ததில் அதிசயம் என்ன? இறைவனது அருளே கண்ணாகக் காண்ப வர் பக்தர் என்று கூறுவதுண்டு: தம் தலைவனது ஆணையைக் கண்ணாகக் கண்ட வர்கள் இந்திரஜித்தின் படை வீரர்கள்.

இத்தகைய பக்தியைத் தூண்டிவிடக் கூடிய தலைமைப் பண்பு இந்திரஜித்திடம் அமைந்திருக்கிறது. இதற்கும் மேலா னது இவனுக்கு ராவணன் மீதுள்ள பக்தி. பழி பாவங்களுக்கு அஞ்சாமல் ராட்சஸ ஏகாதிபத்தியத்தின் சின்ன மாகிய தன் தந்தைக்காக எத்தகைய தியாகத்திற்கும் சிறிதும் பின்வாங்காத வன் இவன்.

இந்திரஜித்தின் வீரம் தர்ம வீரம் அன்று. இந்த அடிப்படைக் குறையை மட்டும் சற்று மறந்து நோக்குவோ மானால் இந்திரஜித்து மகா வீரன் என் பது கவிஞனுள்ளம்.

வில்லாளர் ஆனார்க்(கு)
எல்லாம் மேலவன்

என்று கம்பன் முடி சூட்டி வைக்கிறான் இந்திரஜித்தை வில்லாளர் உலகின் சக்ரவர்த்தியாக.

தன்னுடைய தம்பி அட்சனைக் கொன்ற அனுமனுடைய வீரத்தையும் பாராட்டு கிறான் இந்திரஜித்து. அந்தப் போர்க் களத்திலே அனுமன் செய்திருந்த அந்தக் கொலைகளைக் கண்டும் 'இந்தப் போராற் றல் நன்று!' என்று உவகை கொண்டா னும் இந்திரஜித்து.

நன்றென உவகை
கொண்டான்; யாவரும்
நடுக்கம் உற்றார்

என்பது கவிஞன் வாக்கு.

அனுமனைப் பாசத்தால் கட்டி ராவ ணன் முன் நிறுத்தியபோது இந்திர ஜித்து அனும வீரத்தை வியந்து பாராட் டுகிறான். 'சேவகன் இவன்!' (வீரன் இவன்) என்று அறிமுகப்படுத்துகிறான்.

மந்திராலோசனையும் பின்பும்

மந்திராலோசனை மன்றத்திலே கும்ப கர்ணன் ராமலட்சுமணர் இருக்கும் இடத்திற்கே படையெடுத்துப் போக வேண்டுமென்று சொன்னபோது ராவ ணன் 'இன்றே படையெடுப்போம்' என்று இசைகிறான்.

ராவணன் அப்படிப் படை கொண்டு செல்வது ஏகாதிபத்திய மாட்சிக்கு இழுக்காகும் என்பது இந்திரஜித்தின் அபிப்பிராயம். 'அப்படிச் செய்தால் வீரம் நன்று, பெரிது!' என்று நகை யாடித் தன் ஆலோசனையைத் தெரிவிக் கிறான் இந்த வீர மகன்.

'உனக்கு நான் வெற்றியை விளைக்க வில்லையென்றால் நான் உன் மகன் இல்லை!' என்று சபதம் செய்கிறான். மானுடரையும் குரங்குகளையும் வென்றா லும் அது ஆண்மையாகாது என்றே இவன் கருதுகிறான்.

யாரும்ஒழி யாமைநரர்
வானரர்கள் என்பார்
வேரும்ஒழி யாதவகை
கொன்றலது மீளேன்!

[ஒழியாமை — மிச்சமில்லாமல். நரர் — மனிதர்கள்.]

என்று உறுதி கூறி முடிக்கிறான்.

உடனே விபீஷணன் இவன் கொள் கையைப் பலமாகக் கண்டித்துப் பேசு கிறான். இந்திரஜித்தும் மற்றவர்களைப் போல் குறுக்கிடாமலே கேட்டுக் கொண் டிருக்கிறான்.

விபீஷணனை ராவணன் 'என் விழி யெதிர் நின்றால் நீ சாவாய்!' என்று சீறித் துரத்தினானல்லவா? அப்படிச் செய்ததற்கு இந்திரஜித்தின் பூர்ண ஆதரவு உண்டென்று ஊகிக்கலாம்.

பிறகு முதற் போர், கும்பகர்ணன் போர், அதிகாயன் போர் முதலான நிகழ்ச்சிகளில் இந்திரஜித்து கலந்து கொள்ளவில்லை. ராவணனது பூர்ண வெற்றிக்குரிய சில பெரு முயற்சிகளில் தன்னை முழுக்க இழந்திருந்தான் என்றே கருதலாம்.

ஊரெல்லாம் அழுகை பரவி, அரக்கியர் கள் திரண்டு தலைவிரிகோலமாய் மார் பில் அடித்துக் கொண்டு பிரலாபிக்கும் காட்சியைத்தான் இந்திரஜித்து கண்டு ஒரு சந்தேகத்துடன் புறப்படுகிறான் என்பது கவிக் கூற்று. 'ராவணன் முதற் போரில் ஈடுபட்டது போல் இன் றும் போரில் கலந்து கொண்டிருந் தானோ?' என்று சந்தேகிக்கிறான். 'போரில் ராவணன் இறந்து விட் டானோ?' என்று கூட ஒரு சங்கை ஏற் படுகிறது.

இந்திரஜித்தின் செயலைத் தொடர்ந்து காண்பதற்கு முன், இந்திரஜித்தை 'இலங்கையின் உயிர்' என்றும் 'வான ரர்களுக்கு எமன்' என்றும் கம்பன் சித்திரிக்கப் போகிறான் என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

2. அரக்கன் மீது இரக்கமா ?

'என்ன நேர்ந்து விட்டது ? என்ன ? என்ன ?' என்று எத்தனையோ தடவை, எத்தனையோ பேர்களைக் கேட்டாகி விட்டது. எதிர்ப்பட்டவர்களில் யாராவது பதில் சொன்னால்தானே ?

காணாதன கண்டான்

வாய் நெளிகிறது; ஆனால் நாக்கு நடுங்குகிறது; உடம்பும் நடுங்குகிறது. அவர்களது நிலைகண்ட இந்திரஜித்தின் உள்ளத்திலும் என்னவோ செய்கிறது!

எத்தனை தடவை பார்த்திருக்கிறான் கம்பீர சிகரமான இம்முகங்களை ? ஆனால் இதுவரையில் இப்படிச் சோகக் கதையை ஒரு நாளும் சொன்னதில்லையே !

வெள்ளியங்கிரியை வேரோடு பறித்தெடுக்க முயன்று பொறியில் மாட்டிக் கொண்ட எலிபோல அகப்பட்டுக் கொண்டாரே ராவணனார், அந்த நாளிலும் காணாத சோகக் குறிகளைக் காண்கிறானும் இந்திரஜித்து தந்தை முகத்திலே.



முடுகி ஓடுகின்றன குதிரைகள். மேலும் முடுக்குகிறான். தேர் போய் நிற்கிறது, ராவணனுக்கு எதிரே.

ஓட்டா நெடுந்தேர்
கடிதோட்டி இமைப்பின்
உற்றான்,
காட்டாதன காட்டிய
தாதையைக் கண்ணிற்
கண்டான்.

[கடிது ஓட்டி — வேகமாக ஓட்டி. இமைப்பின் — கண் இமைக்கும் பொழுதில். உற்றான் — அடைந்து. தாதை — தந்தை.]

பரிச்சென்று தேரிலிருந்து குதித்து ராவணனை உற்று நோக்குகிறான். ராவண முகங்கள் காட்டாதன காட்டின என்று கூறுவது கூர்ந்து நோக்கத்தக்கது.

இந்திரஜித்தின் பரபரப்பையும், ராவணனது நெஞ்சில் வீசிக் கொண்டிருக்கும் அலைகளையும் எப்படிக் காட்டி விடுகிறது இந்தக் கவி வேகம், பாருங்கள்!

சொல்லத் தகாதன சொன்னான்

விஷயம் தெரிந்துகொண்டதும், கண்கள் கோப நெருப்பைக் கொட்ட, பற்கள் உதட்டைக் கவ்வ, அண்ணாந்து ஆகாசத்தை நோக்கி வருந்துகிறான், அழுதறியாதவன், தொழுதறியாதவன். 'எல்லாரும் இறந்தாரோ !' என்று ஒரு நெடுமூச்சு விடுகிறான் வானை நோக்கி.

எதிரிகளா அதிகாயன் முதலானவர்களைக் கொன்று விட்டார்கள் ?

கொன்றார் அவரோ ?
கொலைசூழ்கென நீ கொ
டுத்தாய் !

[கொலை சூழ்கென - கொலை சூழ்க என்று; கொலைசெய்து விடுங்கள் என்று.] என்று எவ்வளவு நிஷ்டூரமாகப் பேசுகிறான் தந்தையை நோக்கி !

ராஜ பக்தியும் தந்தை-பக்தியும் நிறைந்த நெஞ்சு பொருமிப் பொருமி நெரு



ப்பை அல்லவா பெரு மூச்சாகவும், பேச்சாகவும் தள்ளுகிறது ?

சோகம் விரைவில் கோபாவேசமாகப் பொங்க, 'லட்சுமணனைக் கொன்றே மீண்டு வருவேன்' என்று சபதம் செய்கிறான் இந்திரஜித்து. 'அப்படிச் செய்யத் தவறி விட்டால் திருமால் முதலிய தேவர்கள் — என்னை நினைத்து நடுங்கிக் கொண்டிருப்பவர்கள்—என்னைச் சிரிக்கட்டும் !' என்கிறான்.

போருக்கு வந்து விட்டான் !

'நான் இன்றைப் போரில் வெற்றி பெறாவிட்டால் சோம்பிச் சோற்றையும் வெறுத்து உயிரை விட்டு விடுவேன்' என்று சபதம் செய்கிறான்.

எல்லாவற்றுக்கும் மேலாக, 'நான் சொன்னபடி செய்யாவிட்டால் ராவணி (ராவண புத்திரன்) அல்ல !' என்று சபதம் செய்கிறான் என்றால், இந்திரஜித்தின் ராவண பக்தியை என்னென்பது ?

இப்பேர்ப்பட்ட மகன் நிஷ்டூரமாய்ப் பேசினால்தான் என்ன ? — அந்த வார்த்தையும் ராஜ பக்தியில் ஊறிக் கனிந்து வருவதுதானே ! பிறகு இந்திரஜித்து கவசத்துடன் உடைவாள் அணிந்து அம்பறாத் தூணிகளைப் பின்புறத்தில் கட்டிக் கொண்டு வேறு ஆயுதங்களுடனும் வில்லுடனும் கிளம்புகிறான்.

போர்க்களத்திலே லட்சுமணனும் சித்தமாகத்தான் இருக்கிறான், 'ராவணனோ, இந்திரஜித்தோ இனி வரக்கூடும்' என்ற எண்ணத்துடன்.

'தேவராஜாவைப் போர் கடந்தவன் வந்து கொண்டிருக்கிறான், அதோ வருகிறான். இன்று போர் வலிது' என்று விபீஷணன் லட்சுமணனிடம் தெரிவிக்கிறான்.

அனுமன் சுக்கிரீவன் முதலியோர் லட்சுமணனுக்குத் துணையாக வந்து நிற்கிறார்கள். இரு திறத்துச் சேனைகளும் இரண்டு திக்கிலிருந்தும் இரு பெருங் கடல்கள் போல் ஆரவாரித்துப் பொங்கி வருகின்றன !

'அடியுங்கள், பிடியுங்கள், எறியுங்கள், எய்யுங்கள்' என்ற ஓசைகளுடன் வில் நாணியின் இடியோசைகளும் எழுகின்றன. இப்போரில் அனுமன் அங்கதன் முதலானவர்களுடன் போட்டிபோட்டுப் போர்த்திறம் காட்டுகிறார்கள் நீலன், குமுதன், இடபன், ஜாம்பவான் முதலானவர்களும்.

ஏற்கெனவே வெற்றி பெற்றிருக்கும் வானர சேனை உத்ஸாக மிகுதியால் இந்திரஜித்தையும் லட்சியம் செய்யாமல் அரக்கர் சேனையைத் தாக்கித் தளரச் செய்து விடுகிறது.

திடீரென்று திக்குகள் செவிடுபடுகின்றன. இந்திரஜித்து வில்லின் டங்கார ஓசையால் நடுங்கச் செய்கிறான், பெருமிதம் கொண்டிருந்த வானரர்களை. வானவர்களும் நடுங்குகிறார்கள்.

விஷாக்கினியைக் கக்கி வரும் ராட்சஸப் பாம்புகள் போல் வந்து பாய்கின்றன அம்புகள். சுக்கிரீவன் வந்து போர் செய்து பார்க்கிறான். அனுமனும் போருக்கு வந்து விடுகிறான்.

வீர வாதம்

'நில்லடா. சிறிது நில்லடா!' என்ற வார்த்தை காதில் விழுந்ததும், அனுமன் இந்திரஜித்தை நோக்கி நிற்கிறான். 'உன்னையும் நினைத்துக் கொண்டுதான் வந்தேன் இந்தப் போர் முனைக்கு' என்கிறான் இந்திரஜித்து.

அனுமன் கூர்ந்து கவனிக்க, இந்திரஜித்தின் வீர வாதம் முழுதும் காதில் விழுகிறது.

'நில்ல டா, சிறிது
நில்ல டா; உனை
நினைந்து வந்தனன்
முனைக்கு; நான்
வில்லெ டாமை, நின(து)
ஆண்மை பேசி உயி
ரோடு நின்று விளை
யாடினாய்;
கல்ல டாநெடு
மரங்க ளோ,வரு
கருத்தி னேன்வலி
கடப்பவோ?
சொல்ல டா'என
இயம்பி னான் இகல்
அரக்கன்; ஐயன் இவை
சொல்லினான்.

[முனை — போர் முனை. வரு கருத்தினேன் வலி — உன்னோடு போர் புரிய வரும் கருத்தை உடையவனான எனது வலிமையை. கடப்பவோ — கடக்க வல்லவைகளோ. இகல் அரக்கன் — வலிமையும் பகைமையும் உள்ள இந்திரஜித்து. ஐயன் — பெரியோனாகிய அனுமன்.]

அனுமனை வில்வீரனாகிய தன்னோடு வில்லெடுத்துப் போர் செய்ய உரிமை பெறாதவன் என்கிறான் இந்திரஜித்து. 'கல்லும் மரமும் வில்லின் வீரத்தைக் கடக்க வல்லவைகளோ!' என்று பரிகசிக்கிறான். ஏச்சும் பேச்சும் எப்படி வந்து விழுகின்றன, 'அடா, அடா!' என்று கன்னத்தில் அடிப்பது போல்!

அனுமன் சுடச்சுடப் பதில் சொல்கிறான்.

வில்லெ டுக்க உரி
யார்கள் வெய்ய சில
வீரர் இங்கும் உளர்;
மெல்லியோய்!



'வில்லெ டுக்க உரி
யாரும் நின்றனன்;
அ(து) இன்று நாளை இடை
காணலாம்!

[வெய்ய சில வீரர் — கொடிய சில வீரர்கள்.]

'வில்லெடுக்க உரிய சில வீரர்கள் இங்கும் உண்டு' என்று ராமலட்சுமணர்களைத் தான் சிறப்பித்துக் கூறுகிறான் அனுமன். 'அடா' என்று நாலு தடவை சொல்லி இந்திரஜித்து அனுமனை இகழ்ந்து பேசினானல்லவா? அதற்கு ஏற்பத் தானும் இகழ விரும்புகிற அனுமன், 'மெல்லியோய்!' என்று மட்டும் கூறித் தன் மேலான பண்பாட்டை உணர்த்துவது கவனிக்கத் தக்கது.

பிறகு அனுமன் இந்திரஜித்தை நோக்கி, 'நீ என்னோடு போர் செய்வாயா? அல்லாவிட்டால் லட்சுமணன் என்ற எங்கள் தலைவனுடன் போர் செய்வாயோ? அதுவும் அன்று எனின் ராம பிரானோடு போர் செய்வாயோ? நீ எது வேண்டினாலும் அதை மறுக்காமல் வழங்குவோம்!' என்கிறான்.

'மொத்த யுத்தமாக நீ யாரோடு போர் புரிய விரும்புகிறாய்?' என்பது அனுமன் வினா. அப்படியானால் அநாவசியமான உயிர்ச் சேதங்களைத் தடுத்துப் போரை முடித்து விடக்கூடும் என்பது குறிப்பு.

வேண்டுவோர் வேண்டியபடி வழங்கும் வள்ளல் போல் வினவித் தனது அபாரமான தன்னம்பிக்கையையும் எதிரிக்குப் புலப்படுத்துகிறான் அனுமன். ஆனால் லட்சுமணன் என்ற பெயர் கேட்டதுமே 'அதிகாயச் சிங்கத்தை வேட்டையாடி விட்டவனல்லவா?' என்ற ஆத்திரம் வந்து விடுகிறது.

இந்திரஜித்து கேட்கிறான்:

எங்கு நின்றனன்
இலக்குவப் பெயர் அவ்
ஏழை எம்பி அதி
காயனும்
சிங்கம் வந்தவனை
வென்று, தன் உயிர்
எனக்கு வைத்ததோர்
சிறப்பினன்?

[இலக்குவப் பெயர் அவ் ஏழை — லட்சுமணன் என்ற பெயர் கொண்ட அந்த ஏழை. ஏழை — அறிவில்லாதவன். எம்பி — என் தம்பி.]

அதிகாயனை லட்சுமணன் கொன்றானென்றால், தன் உயிரை இந்திரஜித்துக்கே பலியாக்க வேண்டும் என்று வைத்திருப்பதாகத் தான் அர்த்தம் என்கிறான். அந்தச் சிங்கத்திற்கு அப்படியே இரையாகி யிருந்தால், இந்திரஜித்தால் கொல்லப்படும் சிறப்பு வாய்த்திருக்க வழியில்லையே என்று லட்சுமணனுடைய அதிர்ஷ்டத்தை வியந்து கொண்டாடுவது போலப் பேசுகிறான் இந்திரஜித்து.

என்ன வீரம்! என்ன இரக்கம்!

இந்திரஜித்தின் அம்புகளால் லட்சுமணன் பக்கத்துச் சேனை பல படியாக அழிந்து போகிறது. ராட்சஸ சேனைத் தலைவர்கள் ஒருங்கு திரண்டு லட்சுமணன் மேல் செல்லுகிறார்கள்:

'நாயகன் மகனைக்
கொன்றாய்! நன்னினை
நாங்கள் காண;
போய் இனி உய்வ(து)
எங்கே?' என்(று)எரி
விழித்துப் புக்கார்.

[நாயகன் மகன் — தலைவனான ராவணனது மகனாகிய அதிகாயன். நன்னினை — வந்து சிக்கிக் கொண்டாய். உய்வது எங்கே — பிழைத்துப் போவது எப்படியோ. எரி விழித்துப் புக்கார் — நெருப்பைக் கக்குவது போல் உக்கிரமாக விழித்துப் போர் செய்ய நெருங்கி வந்தார்கள்.]

தன்னை வளைந்து கொண்ட அந்த அரக்கர்களை லட்சுமணன் கொன்றான், வென்றான் என்பதை அந்த அநாயாச வெற்றி தொனிக்கப் பாடுகிறான் கவி:

மூடினார் மூடி
னாரை முறை முறை
துணித்து வாகை
சூடினான் இராமன்
பாதம் சூடிய
தோன்றல் நம்பி,

[வாகை — வெற்றி மாலை. தோன்றல் — (இங்கே) பரதன்.]

அனுமன் மீது ஏறிக் கொண்ட லட்சுமணனும், இந்திரஜித்தும் ஒருவர் மீது ஒருவர் அம்பு சொரிந்து போராடுகிறார்கள். சூரியாஸ்தமனம் ஆகிறது. லட்சுமணனுடைய போர்த் திறனுக்கு முன் ஆற்றாது இளைத்துப் போன வீரன் மீது இயற்கை இரக்கம் காட்டுகிறதா?

3. இந்திரஜித்தின் இந்திர ஜாலம்

திடீரென்று இருள் விரிவது போல் ஒரு கருந்திரை விழுகிறது. ஏதோ ஒரு பெரிய ஜால வித்தை நடக்கப் போகிறது என்பது சபையில் ஒருவனுக்குத் தான் தெரியும்.

தெரிந்தவன் எச்சரிக்கை செய்கிறான், 'திரை விழுவதற்கு முன்பே, அந்தக் காட்சியைத் தடை செய்துவிட வேண்டும்' என்கிறான்.

கால் நாழிகைப் பொழுது தான் இருக்கிறது. நாடகத்தைக் கலைத்து விட முயன்றும் பயன் படவில்லை, கோர நாடகம் ஆரம்பமாகி விடுகிறது.

தேவர்கள் தேவிமாருடன் அஞ்சிச் சிதறி ஓட, அந்த வான வீதியில் இந்திரஜித்து இருளின் வீக்கத்திலே ஒரு மேகத்தின் மீது நுண்ணிய வடிவுடன் ஆரோகணித்து, கொடிய நாகாஸ்திரத்தை எடுத்து மந்திரம் ஜபிக்கிறான். லட்சுமணனும் வானரர்களுமோ இந்திரஜித்து தோற்று ஓடிப் போய் விட்டதாகவே மகிழ்ந்திருக்கிறார்கள்.

லட்சுமணன் சிரித்துக் கொண்டிருக்கிறான். வானரர்களும் போர்த்தொழில் நீங்கியவர்களாய், இளைப்பாறிக் கொண்டிருக்கிறார்கள். லட்சுமணன் கையிலிருந்த வில்லையும் அங்கதன் வாங்கிக் கொள்கிறான்.

சித்திர ராமாயணம்

காவியத்துள் ஒரு வீர காவியம்

பி.ஸ்ரீ

சேனை அழிந்த பின் தனிமையாக நிற்கிறான் இந்திரஜித்து. அந்தத் தனிமை நோக்கி இரங்கி நிற்பதுபோல நிற்கிறான் அஸ்தமன சூரியன். திசைகளெல்லாம் இருண்டதும், விபீஷணன் எச்சரிக்கை செய்கிறான்.

'இராக் காலம் வந்து விட்டால் நமக்கு ஆபத்து வந்து விடும்; அவனுக்கு மாய சக்தி அதிகரிக்கும்' என்கிறான்.


உடனே லட்சுமணன் இந்திரஜித்தின் சித்திரத்தேரை அழித்துத் தள்ளுகிறான். அழிந்த தேர் விழுவதற்கு முன் வில்லுடனே கிளம்பி வானத்திற்குச் சென்று விடுகிறான் இந்திரஜித்து.

லட்சுமணன் கண்ணை மூடித் திறப்பதற்குள் இந்திரஜித்து வானத்திலே மறைந்து போய், அங்கு மறைந்து நின்று போரைப் பார்த்துக் கொண்டிருந்த தேவர்களுக்கெல்லாம் பீதி உண்டாக்கி விடுகிறான்.

அனுமன் தோளிலிருந்து லட்சுமணன் கீழே இறங்கியதும், தன் திரண்ட பெரிய தோள்களைத் திடீரென்று நாகங்கள் கவ்விக் கட்டுவதைக் காண்கிறான். 'இந்திரஜித்தின் மாய நாடகம் இது!' என்பதை அறிந்து கொள்ளாதவனாய், இன்னது செய்வதென்றும் தெரியாமல் திகைத்துப் போகிறான்.

இந்த நிலையில் லட்சுமணன் போர்க்களத்தையும் வானத்தையும் 'மாறி மாறிப் பார்க்கிறான், எங்கேயிருந்து யார் என்ன செய்கிறாரோ என்பதே தெரியாத நிலையில்.

லட்சுமணனுடைய பரிதாப நிலை கண்டு அனுமனுக்கு ஆத்திரம் பொங்குகிறது. நாலு திசைகளிலும் ஏது ஒன்றும் காணாததால் வாயுபுத்திரன் வேகமாய்க் கிளம்பி யெழுந்து, 'மாயக் கள்வனை வான வீதியிலே தேடிப் பிடிப்போம்!' என்று தீர்மானிக்கிறான். தீர்மானிக்கும் போதே, தன் வயிரத் தோள்களும் பாசத்தால் கட்டப் படுவதைக் காண்கிறான்.



எல்லா வானர வீரர்களும் ‘ஐயோ, தோள் முறிந்து போச்சே!’ என்று முறையிட்டு எழுந்து நிற்க முயன்று கீழே விழுந்து விடுகிறார்கள். கஷ்டம் பொறுக்காமலும், சோகமும் செல்லாக் கோபமும் ஹிம்ஸிப்பதாலும் இவர்கள் படும் பாட்டைப் பாருங்கள்:

மலையென எழுவர்,
விழ்வர் ; மண்ணிடைப்
புரள்வர் ; வானில்

தலைகளை எடுத்து
நோக்கித் தழல்எழ
விழிப்பர் ; தாவி

அலைகிளர் வாலால்
பாரின் அடிப்பர் ;வாய்
மடிப்பர் ; ஆண்மைச்

சிலையவற்(கு) இளைய
கோவை நோக்குவர்,
உள்ளம் தீவர்

[அலைகிளர் வாலால்— அலைவதும் விளங்குவது மாகிய வாலால், பாரின்- நிலத்தில். ஆண்மைச் சிலையவற்கு—வில் ஏந்திய வீரராமனுக்கு. இளையகோவை— தம்பியான லட்சுமணனை. தீவர்—தீயைப் போல் கொதிப்பார்கள்.]

வெற்றி பெற்ற இந்திரஜித்தும் லட்சுமண பாணங்களால் பெரிதும் தளர்ச்சி யுற்ற நிலையில் தான் இருக்கிறான். இப்போது இவன் செய்வதென்ன?

‘சொற்றது முடித்தேன் ;
நாளை என்உடல்—
சோர்வை நீக்கி,
மற்றதும் முடிப்பேன்’
என்று எண்ணினான்,
‘மனிதன் வாழ்க்கை



இற்றது ; குரங்கின்,
தானை இறந்த(து)!' என்(று)
இரண்டு பாலும்
கொற்றமங் கலங்கள்
ஆர்ப்ப, இராவணன்
கோயில் புக்கான்.

[சொற்றது—சொன்னது. தானை—சேனை. கொற்ற மங்கலங்கள் - மங்கள ஒலிகள். ஆர்ப்ப - ஆரவாரம் செய்ய. கோயில்-அரண்மனை. புக்கான் - போய்ச் சேர்ந்தான்.]

லட்சுமணன் முதலியோர் தனது நாக பாசத்தால் இறந்தனர் என்றே கருதி விடுகிறான் இந்திரஜித்து. எனவே, 'நான் லட்சுமணனை வென்றே திரும்புவேன். இல்லாவிட்டால் ராவணி அல்லேன்!' என்று தான் ராவணன் முன் செய்த சபதம் ஒருவாறு நிறைவேறி விட்டதாகவே நினைக்கிறான்.

'நானே மற்றதும் முடிப்பேன்' என்ற சங்கற்பம் எஞ்சி நின்ற ராமன் முதலியோரைக் குறிப்பதாகும். லட்சுமணன் வீழ்ச்சிதான் இந்திரஜித்தைத் தளர்ந்த நிலையிலும் இப்படிக் குதூகலப்படுத்தியிருக்கிறது:

லட்சுமணனை வீழ்த்தியதில் ராமனது வலத் தோளை வீழ்த்தி விட்டதாகவே

என்ணம். ஆகவேதான் 'மனிதன் வாழ்க்கை இற்றது!' என்று முழங்கு கின்றன மங்கல முழக்கங்கள்.

ராவணனது அரண்மனையை நோக்கிப் போகும் வழியெல்லாம் ஒரே குதூகலம் தான். ராட்சஸ மகளிர் புன்முறுவல் புரிந்து கடைக் கண்ணை வீசுகிறார்களாம் இந்திரஜித்தின் வெற்றித்தோள்கள்மீது.

பொன் விளக்குகளும் இரத்தின விளக்குகளும் ஏந்தி வான நாட்டுப் பெண்களும் வேறு மாதர்களும் இசை யுடன் பல்லாண்டு பாடுகிறார்கள். அரக்க மகளிரும் வாழ்த்திக்கொண்டு உடன் வருகிறார்கள். இந்திரஜித்து ராவ ணனை அடைந்து நடந்ததைத் தெரிவிக் கிறான்.

தந்தையின் முகம் நோக்கி, 'நீ துன் பம் நீங்குவாயாக' என்று சொல்லும் போதே, தன் உடம்பிலுள்ள துன்பமும் களைப்பும் தாங்க முடியாத நிலையில் இருப்பதை உணர்கிறான். எனவே, தான் சொல்ல விரும்பியதை யெல்லாம் சொல்லி முடிக்காமலே, 'என் அரு மைத் தந்தையே! நான் விரைவில் இளைப்பாறி மேலே தொடர்ந்து சொல் வேன்!' என்று கூறி விடை பெற்றுக் கொள்கிறான்.

* * *

ஏற்கெனவே எச்சரிக்கை செய்தி ருந்த விபீஷணன் மனம் கலங்கி, 'ஐயோ! இந்திரஜித்து என்னையும் கொன்றானில்லையே' என்று கதறிக் கொண்டே தரையில் விழுகிறான்.

'தேசத்தார் என்னை
என்னே சிந்திப்பார்!'
என்று நையும்
வாசத்தார் மாலை
மார்பன் வாய்திறந்(து)
அரற்ற லுற்றான்.

[என்னே சிந்திப்பார் - என்ன நினைப் பார்களோ. நையும் - மனம் நொந்து போயிருக்கும். வாசத்தார் மாலை - வாசனையுள்ள பூமாலை. அரற்றலுற்றான்- கதறுபவனானான்.]

அபாயம் வந்து விடும் என்று முன் கூட்டி அறிந்து கொண்டிருந்த விபீஷ ணன் மட்டுமே நாகபாசத்தால் கட்டப் படவில்லை. அரக்கர் குலத்தில் பிறந்தவ னதலின் அந்த மாய மந்திரங்கள் இவ னைக் கட்டி விடவில்லையென்று ஊகிக்க லாம். 'உலகம் என்ன நினைக்குமோ?' என்ற இவன் கவலைக்கு இந்த நிலைமை யும் ஒரு காரணமாகக் கூடுமே!

லட்சுமணனுக்கு நேர்ந்த ஆபத்தை அறிந்து கொண்டதும் ராமன் வாய் விட்டுக் கதறவில்லை. வாய் திறந்து ஒன்றுமே சொல்லவில்லை. கண்ணீரும் வடிக்கவில்லை.

அந்த இருட்டிலே ஆக்நேயாஸ்தி ரத்தை (அக்கினியின் தெய்வப்படை யை)ப் பிரயோகித்து வெளிச்சம் உண் டாக்கிக் கொண்டு களத்தைப் பார்வை யிடுகிறான்.

பிணப் பெருங்குன்றுகள், இரத்த நீர்ப்பெருக்குகள், கொழுப்பின் சேறு, ஆயுதக் கூட்டங்கள்—இவற்றுக்கிடையே தம்பியைப் பார்த்து விடுகிறான்.

'எம்பியே இறக்கும்
என்னில், எனக்(கு) இனி
இலங்கை வேந்தன்
தம்பியே! புகழ்தான்
என்னை? பழிஎன்னை?
அறம்தான் என்னை?
[என்னை — என்ன.]

என்றே கதறுகிறான்.

* * *

வான வீதியில் போர்கண்டு நின்ற தேவர்கள், 'இந்த நிலைமை எப்படி முடி யுமோ?' என்று நடுங்குகிறார்கள். அந் தத் தேவர்கள் பக்கத்திலே ஒருவன் நின்று கீழே நடப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

மிக்க அன்பினால் நடுங்குகிறதாம் இவ னுள்ளம். எனினும் அந்த நடுக்கத் தை உதறித் தள்ளிவிட்டு மெள்ள இரு ளின் திரையை விலக்கிக் கொண்டு வெளிப்படுகிறான்.

இருட்டாகிய திரை விரிந்துதானே இந்திரஜித்தின் இந்திரஜால நாடகம் நடைபெறுவதாயிற்று. அந்தத் திரை யைச் சுருட்டிக் கொண்டு வரும் கருட னது வருகை இந்த நாடகத்தைக் குலை த்து மங்களம் பாடுகிறது.

தன் நாடகத்தை நடக்கவிட்டு, வெற்றி மங்களம் பாடி வீடு சேர்ந்தான் இந்திர ஜித்து. அந்த நாடகத்தை அவனது விருப்பத்திற்கு மாறாக முடித்து ராம னுக்கே வெற்றி மங்களம் பாடுகிறது கருடன் வருகை.

4. கருட உபநிஷதம்

'உம்முடைய கடவுள் சக்தியுள்ளவரா?' என்று கேட்டான் நாஸ்திகன் பாதிரியாரை நோக்கி.

'ஸர்வ சக்தியும் உள்ளவர்.'

'தற்கொலை செய்து கொள்ளும் சக்தி கூட உண்டோ? அப்படியானல் செய்து காட்டலாமே. எங்களுக்கும் எவ்வளவோ நிம்மதி' என்று சிரித்தான் நாஸ்திகன்.

கடவுள் தற்கொலை புரிவதா?—முடியுமா? ஸர்வ சக்திக்குத் தற்கொலை புரியும் சக்தி உண்டா?

வான வீதியிலே தேவர்களோடு ஒரு தேவதையாக நின்று போரைப் பார்த்துக் கொண்டிருந்த கருடன். 'பரம்பொருள் தன் அவதார நிலையில் தற்கொலை புரிந்து கொள்ளவும் துணிந்ததே!' என்று சித்தம் நடுங்கினான். நடுங்கி நின்ற அந்த நிலையிலேயே வெளிப்பட்டான்.

அந்த நடுக்கமே மின்னல்—பாய்ச்சலில் கருடனைக் கீழே செலுத்துகிறது; நாகபாசத்தால் கட்டுண்டு கிடந்த வீரர்களுக்கு மேலே கொண்டு வந்து சேர்த்து விடுகிறது. சூட்சும உருவில் நின்றவன் பறந்து வரும்போதே ஸ்தூல வடிவம் பெற்று விடுகிறன்.

மின்னொளி வீசுகிறது கருடன் மேனி, இப்போது போர்க்களத்திலுள்ள இருளை இந்தக் காந்தியே போக்கி விடுகிறது. சிறகுக் காற்று மெல்ல வீசவே நாக பாசம் நடுநடுங்கி முழுதும் அழிந்து போகிறது.



இதைச் சொல்லப் பல பாடல்கள் தேவையாகிறது கவிஞனுக்கு. சிலர் கம்பன் கவிதையின் போக்கை உள்ளபடி உணர்ந்து கொள்ளாமல் நீளத்தை மட்டும் ஸ்தூலமாகக் கண்டு கொள்கிறர்கள், குருடன் ரோஜாவின் முள்ளை மட்டும், திருவிழாவின் ஓசையை மட்டும் 'கண்டு' கொள்வது போலே!

ஏதோ அலங்காரமான அடுக்கு மொழிகளின் சப்தஜாலக் கோவை என்றும் ஏமாறிப் போகிறார்கள்.

ஆனல் ஹோமர், ஷேக்ஸ்பியர், வால்மீகி, கம்பன் போன்ற மகா கவிகளை அளந்து அகல நீளம் காண்பது எளிதான காரியமன்று. தக்க பயிற்சியில்லாதவர்கள் தங்களிடமுள்ள அற்பக் கருவிகளைக் கொண்டு மகாகவிகளின் போக்கை அளந்து முடிவு கட்டுவது சரியன்று. பாலை அளக்கும் நாழி பாலின் சுவையையும் அளந்து காட்டுமா?

* *

இனி, இந்த எச்சரிக்கையை உள்ளத்தில் கொண்டு கருடன் வருகையையும் செய்கையையும் ஒருவாறு ஆராய்ந்து பார்க்கலாம்.

இதோ இந்தப் பாட்டைப் பாருங்கள்: பொருள் தெரிவதற்கு முன்பே ஓசை இன்பத்தை அனுபவித்துப் பாருங்கள்: இந்த ஓசையிலேயே கருடன் வருகின்ற அதி சூட்சும விசையையும் அநாயாஸ விஜயத்தையும் உணர்ந்து கொள்ளலாம்;

காதங்கள் கோடி
  கடைசென்று காணும்
  நயனங்கள் வாரி
    கலுழக்,
கேதங்கள் கூர
  அயர்கின்ற வள்ளல்
  திருமேனி கண்டு,
    கிளர்வான்,
சீதங்கொள் வேலை
  அலைசிந்த, ஞாலம்

இருள்சிந்த, வந்த
சிறையால்
வேதங்கள் பாட,
உலகங்கள் யாவும்
வினைசிந்த, நாகம்
மெலிய

[காதங்கள் கோடி கடை சென்று — கோடிக் காத தூரம் அளவும் சென்று. நயனங்கள் வாரி கலுழ - கண்களில் நீர் வழிய. கேதங்கள் - துன்பங்கள். கூர - அதிகரிக்க. அயர்கின்ற - அதனால் சோர்கின்ற. வள்ளல் - (இங்கே) ராமபிரான். கிளர்வான் - ஊக்கம் அதிகரிக்கப்பெறுபவனை கருடன். சீதம் கொள் வேலை - குளிர்ச்சி கொண்ட கடல். ஞாலம் - உலகம். வந்த சிறையால் - பறந்து வந்த சிறகுகளால். வினை சிந்த - தீவினைகளை உதறித் தள்ள. நாகம் மெலிய - நாக பாசம் தளர்ந்து போக.]

பாட்டு முடியவில்லை; இசையின்பத்திற்கோ முடிவே இல்லை எனத் தோன்றுகிறது. நாதமே பேசுவது போல், கீதமே பொருள் கூறுவது போல், ஏதோ ஒரு வேத மந்திரத்தைத் தமிழே பாடுவது போல், பொங்கி வருகிறது பாட்டு. இனி நாம் பொருளையும் சற்றுக் கூர்ந்து பார்ப்போம்.

கழுகின் நெடுந்தூரப் பார்வை பிரசித்தமல்லவா? அந்த இனத்தைச் சேர்ந்த கருடனின் பார்வை காதங்கள் கோடியும் பார்த்து விடுகிறது என்பது கற்பனை.

கருடனது நெடுந்தூரப் பார்வை இப்போது, ஆதியஞ்சோதி உருவைப் பரமபதத்திலே விட்டு விட்டு மண்ணுலகில் வந்து பிறந்திருக்கும் வள்ளலின் துயரம் நிறைந்த திருமுகத்தை நோக்குகிறது; நோக்கி ஊக்கம் அடைகிறது!

கிறிஸ்து பகவானைச் 'சோகங்கள் நிறைந்த மனிதன்' என்று சிறப்பாகக் குறிப்பிடுவதுண்டு. இங்கே ராமபிரானை, 'துயரங்கள் நிறைந்த வள்ளல்' என்று கவிஞன் சுட்டிக் காட்டுகிறான்.

இந்த வள்ளன்மை கண்டு, இந்தத் தியாகமூர்த்தியின் திருமேனி கண்டு ஒரு புதிய ஊக்கம் பிறக்கிறதாம் கருடனுக்கு, 'இனி உலகம் உய்ந்து போகும்' என்று.

கருடன் சிறகை மெள்ள விசி, கடல் அலை சிந்தவும், உலகம் இருள் சிந்தவும் வருகிறானாம். சிறகுகளை அடித்துக் கொண்டா வருகிறான்? சிறகுகளால் வேதம் பாடிக் கொண்டு வருகிறானாம்.

இருள் சிந்திய உலகம் வினை சிந்தும்படி வருகிறானாம். இப்படி வருகின்ற வருகையில் இந்திரஜித்தின் நாக பாசம் மெலிந்து தளர்ந்து ஒழிந்ததும் அதிசயமாகுமோ?

* * *

கருடன் வருகையை அகக் கண்ணால் பார்க்கத் தொடங்கும் கவிஞன் கருட தியானத்திலே ஆழ்ந்து ஒரு கருட மந்திரத்தைக் கண்டு காட்டுவது போலப் பாடுகிறான். அந்த இரவிலே இருட்டைச் சுருட்டிக் கொண்டு வெயிலைப் பரப்பி நிலவையும் திரட்டிக் கொண்டு வருகிறானாம்.

ஏதோ ஒரு அதிசய பூமியை அதிசயமாகச் சுட்டிக் காட்டும் பாவனையில் வந்து விழுகிறது இந்தக் கவிதை—மந்திரம்;

அல்லைச் சுருட்டி
வெயிலைப் பரப்பி,
அகல் ஆசை எங்கும்
அழியா
வில்லைச் செலுத்தி
நிலவைத் திரட்டி
விரிகின்ற சோதி
மிளிர...

[அல்லை — இருட்டை. அகல் ஆசை— அகன்ற திசைகள். அழியா வில்— இடையறாத ஒளி.]

மந்திரத்தை ஜபித்துக் கொண்டேயிருக்க வேண்டியதுதான்; பொன் மேனியனான கருடன் சந்திரிகை வீசும் வெண்ணிறக் கழுத்துடன் நமக்கும் பிரத்தியட்சமாகி விடுகிறானே!



மின்னலால் செய்த ஒரு குன்று வானில் மிதந்து மிளிர்வதுபோல் ஒரு தோற்றம்; நாகரத்தினங்களால் செய்த ஆபரண ஜோதிகள் மின்ன, மார்பிலே திருமாலுக்குரிய வனமாலை புரள, அன்று பிரிந்த துயர் தீரத் தூரத்திலிருந்தே அண்ணல் திருமேனி கண்டு தொழுகின்றான் கருடன்.

சிறகுகளால் வேதம் பாடி வந்த கருடனது வாய்மொழி ராமனைத் தோத்திரம் செய்கிறது. இந்தத் தோத்திரம், 'தமிழிலே உபநிஷதம் அவதரித்ததோ!' என்று அதிசயிக்குமாறு வெளிப்படுகிறது.

'எல்லாம் உடையவன் எதற்காக வருந்த வேணும்?' என்று ராமனைத்



தேற்றுவது போலத் தோத்திரம் செய்யத் தொடங்குகிறான் கருடன்.

ஆர் இவ் அதிரேக
மாயை அறிவார் ?

[அதிரேகம்—மிகுதி; மேன்மை]

என்று கேட்கிறான்.

இந்தக் கேள்வி கருட ஸ்தோத்திரத்தினிடையே அடிக்கடி எழுகின்றது. பரம்பொருளுக்கும் ஒரு தம்பியாம்; இவனுக்கும் ஒரு கஷ்டமாம்; இந்தக் கஷ்டத்திற்காகப் பரம் பொருளுக்கும் பெருந்துயரமாம், தளர்ச்சியாம். 'ஆர் இவ் அதிரேக மாயை அறிவார் ?'

பரம பக்தனாகிய கருடனுக்கும்—அவனுக்கு வாகனமாகிப் பிரியாது பழகிக் கொண்டிருப்பவனுக்கும் — பகவானின் மாயை விளங்குவதில்லையாம்.

துஷ்டநிக்கிரகம் என்ற பெயரால் தன் சொரூபத்திற்கு உட்பட்ட மக்களாகிய அரக்கரைக் கொல்லத்தான் தீர்மானித்தானே, அதற்கு ஒரு சங்கற்பம் போதாதா ? வில்லும் அம்பும் வேண்டுமா ?

வில்ஒன்(று) எடுத்தி;
சரம்ஒன்(று) எடுத்தி !

[எடுத்தி—எடுக்கிறாய். சரம்—அம்பு.]—அதாவது கருணைக் கடலும் ஒரு வேடனைப் போல் வில்லும் அம்பும் எடுத்துக் கொண்டு வேட்டைக்குக் கிளம்ப வேண்டுமா ? — என்று பரிகசிப்பது போலவும் கேட்கிறான்.

பரிகாசத்திற்கு ஒரு பரிகாரம் செய்து கொண்டது போல,

அல்என்று நிற்றி;
பகல்ஆதி—ஆர் இவ்
அதிரேக மாயை
அறிவார் ?

[அல்—இரவு. நிற்றி—நிற்கிறாய். பகல் ஆதி—பகலும் ஆகிறாய்.]

என்றும் கேட்கிறான்.

பகல் தானா தெய்வ சொரூபம் ? இரவும் தெய்வ சொரூபம் தானே ? இருளிலும் இறை ஒளி காண்பது தானே முறை ? இரவில்லாமல் பகலும் உண்டோ ?

துன்புள(து) எனின் அன்றோ
சுகம் உளது ?

என்று ராமன் குகனை நோக்கிக் கேட்டானல்லவா ? அப்படியே இரவு இருந்தால் தானே பகல் என்பதும் இருக்க முடியும்?

இப்படியெல்லாம் அமைந்திருக்கிறது கருட ஸ்தோத்திரமாகிய உபநிஷதம். சிறகுகள் வேதம்பாட நெஞ்சும் நாவும் இப்படி உபநிஷதம் பாட, விரைந்து வருகின்ற கருடனை ராமனும் பார்க்கிறான். தலை நிமிர்ந்து பார்க்கிறான்.

இனி, உபநிஷத லோகத்திலிருந்து போர்க்களத்திற்கே இறங்கிக் கதைத் தொடர்ச்சிக்கே வந்து விடுவோம். 'நாகபாசம் மெலிந்தது' என்று இந்த உபநிஷத ஆரம்பத்தில் கவி சுருக்கமாய்ச் சொன்னதற்கு இந்த உபநிஷத இறுதியில் உவமை வாயிலாக ஒரு விளக்கம் கிடைக்கிறது.

இந்த விளக்கத்திற்கு இரண்டு உவமைகள். இவ் இரண்டும் கவிஞனுடைய அனுபவத்திலிருந்து கிடைத்தவையே.

கவிஞன் ஒரு தாமரைப் பொய்கையைச் சுற்றிச் சுற்றிச் சில சமயங்களில் உலாவி வருவதுண்டு. அந்தரங்க நண்பனும் வள்ளலும் ரஸிகனுமாகிய சடையப்பனும் உடன் செல்வதுண்டென்றும் கருதலாம்.

பொய்கையில் பூத்திருக்கும் செந்தாமரைப் பூக்களில் ஒரே மோகம் கவிஞனுக்கு. வள்ளலுக்கோ அந்தப் பூவின் மேல் பிறந்த மோகத்துடன் அதைக் கண்டு மோகித்து நிற்கும் கவிஞன் மேலும் மோகம்.

'இந்த அதிசய உணர்ச்சி பாட்டாகி வரும்; அனுபவிக்கலாம். எப்போது, எப்படி வருமோ ?' என்று எண்ணமிடுகிறான் வள்ளல். கவிஞனே ஒரு பூவைத் தண்டுடன் கிள்ளியெடுக்கிறான்.

இருவரும் உலாவிக் கொண்டிருக்கும் போதே இதழ்களைப் பிய்த்து எறிந்து விடுகின்றன கவிஞன் விரல்கள். தண்டுதான் மிச்சம். 'கவிஞன் கையும் இப்படிச் சேட்டை செய்கிறது !' என்று நினைக்கிறான் நண்பன்.

தண்டையும் கிழித்து விடுகிறது கை. அதன் உள்ளே உள்ள நூலை எடுத்துக் காட்டுகிறது. மெல்லிய நூல் பளிச்சென்று அற்றுப் போகிறது.

இந்த அனுபவம் தான் முதலாவது உவமையாகிறது, நாகபாசம் அநாயாசமாக அற்றுப் போனதற்கு. அடுத்த உபமானமோ, கவிஞன் வாழ்க்கையுடன் மேலும் நெருங்கிய தொடர்புள்ளது.

காவியத்துள் ஒரு வீர காவியம்

பயந்தாலு, என்ன ?

பி.ஸ்ரீ

5

சடையப்பன் மாளிகையில் அடிக்கடி கலை விழாக்கள் நடைபெறும். தத்துவ அறிஞர்கள் வருவார்கள்; வாதம் செய்வார்கள்; வேதம் ஓதுவார்கள். கம்பன் தன் உள்ளத்தைத் தத்துவக் கனலில் ஜொலிக்கச் செய்து கொண்டிருப்பான்; அல்லது வேதப் பண்ணிலே சித்தத்தைப் பறக்க விடுவான்.

ஆத்ம சரிதத் துணுக்கு

கலைஞர்கள் வருவார்கள் — ஓவியக் கலைஞர், காவியக் கலைஞர், கல்லிலே காவியம் எழுதுவோர் எல்லாரும். தேவாமிர்தமாக அனுபவிப்பான் கம்பன் அந்தக் கலை விருந்துகளை.

இசைகாரர் பாடுவார்; கூத்தர் ஆடுவார். கதா காலக்ஷேபங்கள் நடைபெறும். கம்பன் செவியால், கண்ணால் பருகுவான்.

பெரும்பாலும் தமிழ் விருந்துகள் நடைபெறும். வடமொழியிலும் சொல்-விருந்துகள் — வாதப் பிரதிவாதங்கள், காவிய முழக்கங்கள், தெலுங்கு, கன்னடம் முதலான அண்டை அயல் மொழிகளிலும் அறிவுரைகள், அறவுரைகள், தத்துவ வாதங்கள். கம்பன் மௌனமாய்க் கேட்பான் ;கனவு காண்பான்.

கவியரங்குகள் இங்கே ஒரு சிறப்பியல்பு. வால்மீகி பகவான் அருளிய ஆதிகாவியத்தை மெய்ம்மறந்து கேட்டுக் கொண்டிருப்பான்.

செந்தாமரை வெண்டாமரைப் பூக்களின் அழகை மௌனமாக மெய்ம்மறந்து அனுபவிப்பதுபோல் கம்பன் சடையன் மாளிகையில் கலை மன்றங்களையும் உரையரங்குகளையும் அனுபவிப்பதுண்டு. சில சமயங்களில், பூவை விட்டுத் தண்டை மாத்திரம், பிறகு நாலை மாத்திரம் நோக்கி அனுபவிப்பது போலவும் அந்த அரங்கு நிகழ்ச்சிகளை ஆராய்ந்து பார்ப்பான் !

தன் நினைவுகளிலும் கனவுகளிலுமே தன்னை இழந்திருந்து, கடைசியாகச் சடையன் சம்மானிக்கும்போது கவனிக்கத் தொடங்குவான். சம்மானிக்கும் விதத்திலிருந்தே தன் நண்பனுடைய ரஸிகத் தன்மையைப் பெரிதும் ரஸித்துக் கொண்டிருப்பான் !

மாதம் மும்மாரி பெய்வதாகக் கவிகள் சாதாரணமாய்ச் சொல்வதுண்டல்லவா ? கம்பனே தினம் மழை பொழிவதைப் பார்க்கிறான் வெண்ணெய்நல்லூரிலே! அப்படிப்பொழிகிறானும் சடையன் தன் வண்மையை.

தமிழகத்திற்கு வெளியிலிருந்த பிரதேசங்களிலிருந்து வந்த கலைஞர்களையும் அறிஞர்களையும் பட்சபாத மில்லாமல் சடையப்ப வள்ளல் ஆதரிப்பதையும் கம்பன் பார்த்துப் பார்த்துப் பூரித்துப் போவான்.

மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ ?

தமிழகத்தின் வடஎல்லைதான் திருமலை என்ற திருப்பதி ; தமிழ் நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் வடஎல்லை வடமலையாகிய இமயம் என்று சொல்லுகிறோ மல்லவா? சடையப்பனுள்ளம் எந்தத் தேசத்திலிருந்தும் அறிவையும் கலைகளையும் வரவேற்கச் சித்தமாக இருந்தது என்பதைக் கம்பன் அறிவான்.

சடையனுடைய பணியாளர்கள் திரிந்து கொண்டிருப்பார்களாம் புலவர்களை வரவேற்க வேண்டுமென்று. வெண்ணெய்நல்லூரை நெருங்கி வரும்போதே அறிஞர் முதலானவர்களை எதிர்

கொண்டு நலவரவு கூறி அழைத்து வந்து விடுவார்கள். பிறகு சடையப்ப வள்ளலின் உபசாரத்தைச் சொல்லவா வேண்டும்?

கம்பன் கலைஞர்களின் மேதையை மறந்து சடையனின் ரஸிக மேதையை வியந்து நோக்கிக் கொண்டேயிருப்பதும் உண்டு. இத்தகைய அனுபவத்தை எப்படி மறக்க முடியும்?

* * *

என்ன உவமை! என்ன நன்றி!

கருடன் சமீபித்ததால் நாகபாசம் விரைவில் நீங்கியதற்கு உவமை தேடிய உள்ளத்திலே பனிச்சென்று தாமரைப் பொய்கையைச் சுற்றி உலாவி வரும் போது தனக்குக் கிடைத்த தாமரைத் தண்டின் நூலைப் பற்றிய அனுபவம் நினைவிற்கு வருகிறது:

வாசம் கலந்த
மரைநாள நூலின்
வகை.

[வாசம் - வாசனை. மரை — தாமரை. நாள நூல் — தண்டின் உள்ளேயிருக்கும் நூல். வகை — தன்மை.]
என்று பாடத் தொடங்குகிறன்.

இந்த உவமை பொருத்தமானதென்றே முதல் முதல் தோன்றுகிறது. ஆனல் சடையப்பனுடன் உலாவித் திரிந்து ஒருசமயம் அடைந்த இந்த அனுபவத்தைக் காட்டிலும், சடையப்பன் தன் மாளிகையிலே கலைஞர்களை வரவேற்று உபசரிக்கும் அந்த அனுபவமே பொருத்தமான உவமை தரும் என்று தீர்மானிக்கிறன்.

வெண்ணெய்நல்லூரரை அனுகி வந்த அறிஞர்கள் கலைஞர்கள் முதலானவர்களின் பசி எவ்வளவு விரைவாக நீங்குமோ, அவ்வளவு விரைவாக நீங்கிவிட்டது நாகபாசம் என்கிறன்:

வாசம் கலந்த
மரைநாள நூலின்
வகையென்ப தென்னோ?
மழையென்(று)
ஆசங்கை கொண்ட
கொடைமீளி அண்ணல்
சடையன்தன் வெண்ணெய்
அனுகும்
தேசம் கலந்த
மறைவாணர் செஞ்சொல் —
அறிவாளர் என்(று)இம்
முதலோர்
பாசம் கலந்த
பசிபோல் அகன்ற
பதகன் துரந்த
உரகம்.

[ஆசங்கை — சந்தேகம். கொடைமீளி — கொடை வீரம் உள்ளவன். அண்ணல் - பெரியோன். வெண்ணெய் — வெண்ணெய் நல்லூர். அனுகும் — நெருங்கி வந்து சேரும். தேசம் கலந்த — பல பிரதேசங்களைச் சேர்ந்த. மறைவாணர் — வேதம் வல்லவர்கள். செஞ்சொல் அறிவாளர் — செம்மையான சொற்கலைகளில் தேர்ந்த அறிஞர்கள். இம் முதலோர் — இவர்கள் முதலானவர்களுடைய. பாசம் — யம பாசம். அகன்ற — நீங்கிப் போயிற்று. பதகன் — பாதகனை இந்திரஜித்து. துரந்த — பிரயோகித்த. உரகம் — நாகம்; (இங்கே) நாக பாசம்.]

சடையப்பனுடைய ஊரை அனுகியதும் கலைஞர்களுக்கும் அறிஞர்களுக்கும் பசி முழுதும் நீங்கி விடுவது போல், கருடன் அனுகியதும் நாகபாசம் இருந்த இடம் தெரியாது முழுதும் அழிந்து போகிறது என்று உவமை காட்டும் போது, கவிஞன் உள்ளத்திற்குத் தான் எவ்வளவு திருப்தி? சடையனுக்குத் தான் எத்தகைய (. . . . ((



யமபாசத்திலிருந்து விடுவிக்கப்பட்டது போல் நாகபாசத்தி லிருந்து விடுதலை பெற்ற லட்சுமணன் உணர்வு பெற்றெழுந்து ராமனை வணங்குகிறான். ராமன் அவனைத் தன் மார்பில் இறுகத் தழுவிக் கொள்கிறான்.

அப்பால் கருடனுக்கு எதிரில் வந்து நன்றி தெரிவிக்க விரும்புகிறான்.

ஆனால் 'யாருக்கு நன்றி செலுத்த வேணும்:' என்று தெரிய வேணுமே. அதற்காக, ', யனே! நீ யார்?' என்று கேட்கிறான். 'நாங்கள் இருக்கும் இடம் தேடி வந்து எங்களுக்கு உயிரையும் வாழ்வையும் கொடுத்தாய்!' என்கிறான்.

மழைக்குப் புகழ் மாலையா?

பிறகு 'மிகக் கொடிய துன்பத்தை உண்டாக்கின தெய்வமே அதை நீக்கப் பிரத்தியட்சமாக வந்து விட்டது!' என்று சொல்லிக் கொண்டே ராமன் வானர வீரர்களைத் தானே எழுந்து போய்த் தழுவிக் கொள்கிறான்.



என்ன பிரதியுபகாரம் செய்ய முடியும் இந்த மகா புருஷனுக்கு? தோற்றத்தைப் பார்த்தால், 'உனக்குப் பிரதியுபகாரம் செய்யும்வகை எங்களுக்கு இல்லை' என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

ராமன் கருடனை நோக்கிப் புகழ்ந்து பேசத் தொடங்குகிறான். '' எங்களுக்கு அருமையான உயிரை அளித்து உதவி எங்களிடம் பெறும் காரியம் ... '' என்று சொல்லும்போதே கருடன் மறைந்து போகிறான். எனவே கருடனை நோக்கி எழுந்த புகழுரையைப் பக்கத்தில் இருந்தவர்களை நோக்கிப் பூர்த்தி செய்யுமாறு நேர்ந்து விடுகிறது.

புகழ்மாலை கழுத்தில் விழுவதற்குமுன் அந்தப் பாராட்டுக்கு உரியவன் பளிச் சென்று நழுவிப்போய் விடுகிறான் என்று வைத்துக் கொள்வோம். மாலை சூட்ட விரும்பியவன் அந்த மாலையும் கையுமாகச் சபையை நோக்கி நின்று முன்னிலும் அதிகமாய்ப் புகழத் தொடங்குவான், புகழுக்கு உரியவனாகி அதைப் பெற்றுக் கொள்ளாமல் போனவனைக் குறித்து! இது இப்போது ராமனின் நிலை.

இனி இந்தப் புகழுரைப் பாட்டை நோக்கலாம்;

ஆரியன் அவனை
நோக்கி, 'ஆருயிர்
உதவி, யாதும்

காரியம் இல்லான்
போனான்; கருணையோர்
கடன்மை ஈதால்!

பெரிய லாளர்
செய்கை ஊதியம்
பிடித்தும் என்றார்;

மாரியை நோக்கிக்
கைம்மா(று) இயற்றுமோ
வையம்?' என்றான்.

[ஆரியன் - சிறந்தவனான ராமன்; அவனை - கருடனை. கடன்மை - தன்மை. ஈதால் - இப்படித்தானிருக்குமோ. பெரியலாளர் - பெருந் தன்மையுள்ள பெரு மக்கள். செய்கை - செய்த உபகாரச் செய்கைக்கு. ஊதியம் - லாபம். பிடித்தும் - பெறுவோம். என்றார் - என்று கருதார். வையம் - உலகம்.]

மழை பெய்கிறதே என்று அதற்கு நாம் கைம்மாறு செய்ய முடியுமா? என்ற இந்த அழகிய கருத்து, பிரசித்தமான குறள் ஒன்றைத் தழுவி அமைந்திருக்கிறது:

கைம்மாறு வேண்டா
கடப்பாடு; மாரிமாட்(டு)
என்ஆற்றும் கொல்லோ உலகு?

[கடப்பாடு - கடமை. மாரி மாட்டு - மழையிடம்; மழைக்கு. என் ஆற்றும் கொல்லோ - என்ன செய்ய முடியும்.]

* * *

இந்தப் பெரு நிகழ்ச்சி அனுமனுடைய வேடிக்கையான ஒரு வேண்டுகோளுடன் முற்றுப் பெறுகின்றது. 'நாமெல்லாம் சேர்ந்து சத்தம் போட்டுப் பார்க்கலாமே! அதற்கு அனுமதி வேணும்' என்று கேட்கிறான் ராமனை நோக்கி.

ஏன் இந்த வேண்டுகோள்? 'லட்சுமணன் இறந்து போனதாகச் சீதை வருந்திக் கொண்டிருப்பாளே; '' வெற்றி பெற்றோம் '' என்று கவலையின்றி மெய்ம்மறந்து அரக்கர்கள் உறங்கிக் கொண்டிருப்பார்களே!' என்பது அனுமன் சொல்லும் காரணம்.

'வஞ்சகர் உறக்கம் கெடவேண்டும்; '' செத்துப் போனவர் மீளவும் பிறந்து விட்டார்கள்! '' என்று அந்த வஞ்ச உள்ளங்கள், நடு நிசியில் திகிலடைய வேண்டும்.

இனி, இந்தப் பாட்டைப் பார்க்கலாம்:

'இறந்தனன் இளவல்,
என்னா இறைவியும்
இடுக்கண் எய்தும்;

மறந்தனர் உறங்கு
கின்ற வஞ்சரும்
மறுகி, ''மீளப்

பிறந்தனர்!'' என்று
கொண்(டு),ஓர் பெரும்பயம்
பிடிப்ப ரன்றே!

அறம்தரும் சிந்தை
அன்ப! ஆர்த்தும்'என்(று)
அனுமன் சொன்னான்.

[இளவல் — தம்பி. என்னா - என்று எண்ணி. இறைவி - தலைவி. இடுக்கண் எய்தும் - துன்பம் அடைவாள். மறந்தனர் - மெய்ம் மறந்து. மறுகி — மனம் கலங்கி. ஆர்த்தும் — ஆரவாரம் செய்வோம்.]

அனுமன் எதிர் பார்த்தபடி ராவணன் தூங்கிக் கொண்டிருக்கவில்லை. சோர்ந்து கிடந்த இந்திரஜித்தின் காதில் ஆரவாரம் விழவும் இல்லை. ராவணன் காதில் தான் விழுந்ததே, பயந்தானா, என்ன?

காவியத்துள் ஒரு ஓர காவியம்

நடுநிசியில் பொன்விளக்கு

பி.ஸ்ரீ

6

கள்வெறி கொண்டு பிதற்றிக்கொண்டிருப்பவன் கடைசியாகச் சோர்ந்து மெய்ம்மறந்து கிடப்பானல்லவா? அப்படியே இந்திரஜித்து, ராவணன் முதலான வெற்றி வெறியர்களும் ஒய்ந்து உறங்கிக் கொண்டிருப்பார்கள். அந்த உறக்கத்தைத் தங்கள் வெற்றி ஆரவாரம் அந்த நட்ட நடு நிசியில் பளிச்சென்று கலைத்துப் பெரும் பயம் விளைவித்து விடும் என்று தானே அனுமன் எதிர்பார்த்தான்?

ராமனும் அப்படித்தான் எதிர்பார்த்தான். ஆனால் நடந்ததென்ன?

இலங்கையில் உறங்காத இருவர்

பெருமுழக்கம் ராவணன் காதில் விழத்தான் செய்கிறது. உறங்காமலே தான் கேட்டுக் கொண்டிருக்கிறான்.

ஏன் உறங்கவில்லை? வெற்றி நிம்மதி தர வில்லையா?

பழிப்பருஞ் சிந்தை-
யாள்பால் சிந்தனை
படரக், கண்கள்

விழிப்பிலன், மேனி
சால வெதும்பினன்,
ஈசன் வேலும்

குழிப்பரி தாய
மார்பை மன்மதன்
கொற்ற வாளி

கிழிப்புற, உயிர்ப்பு
விங்கிக் கிடந்தவாள்-
அரக்கன் கேட்டான்.

[பழிப்பருஞ் சிந்தையாள் - பழிப்பில்லாத தூய சிந்தையை உடைய சீதை. சிந்தையாள் பால்-சீதையிடம், விழிப்பிலன் - விழித்துப் பார்த்தலும் செய்யாதவனாய், சால வெதும்பினன்-மிகவும் வெப்பம் அடையப் பெற்றவனாய், ஈசன் வேலும் - (இங்கே) சிவபெருமானது சூலாயுதமும், குழிப்பு அரிதாய-குழிப்பதற்கு. அதாவது, துளைப்பதற்கு அரியதான, கொற்ற வாளி-வெற்றியுடைய மலரம்புகள், கிழிப்புற-கிழித்துச் செல்ல. உயிர்ப்பு வீங்கி-பெருமூச்சு விட்டுக் கொண்டு, வாள் அரக்கன் - வாளாயுதமுள்ள அரக்கன்.]

இலங்கையில் அந்த இரவில் இருவரே உறங்கவில்லையாம்; ராவணனும் சீதையுமே. ஒருதலைக் காமம் பிடித்த பேதையும், சீதையுமே தூங்காதவர் என்கிறான் கவி.

ராவணன் சீதையையே நினைத்துக் கொண்டிருப்பதால் உறங்க வில்லை; சீதையோ ராமனையே நினைத்துக் கொண்டிருப்பதால் உறங்கவில்லை.

தாதைசொல் தலைமேல்
கொண்ட தாபதன்,
தருமமூர்த்தி,

ஈதைகள் தீர்க்கும்
நாமந்(து) இராமனை
எண்ணி ஏங்கும்

சீதையும், அவளை
உன்னிச் சிந்தனை
தீர்ந்தும் தீராப்

பேதையும் அன்றி,
அவ்வூர் யாருளர்
துயில்பெறாதார்?

[தாதை — தந்தையான தசரதன், தாபதன்—தவ வடிவத்தை யுடையவன். ஈதைகள் — துன்பங்கள், உன்னி — நினைத்து.]

'ஆசை வீண் ஆசைதான்' என்று நிச்சயமாகத் தெரிந்திருந்தும் தன் ஒருதலைக் காம உணர்ச்சியை அடக்க முடியாமல் தவிக்கின்ற பேதைமை - நிலை பிரதிபலிக்கின்றது, 'சிந்தனை தீர்ந்தும் தீராப்பேதை' என்ற சொற்றொடரிலே.



சிரிப்பும், அதற்குப் பரிசுகளும்

அனுமன்எதிர் பார்த்தபடி, பெரும் பயம் ராவணனைப் பிடித்துக் கொள்ளாதது மட்டுமா?— ஒரு பரிகாச உணர்ச்சியும் அரக்கர்கோனைப் பற்றிக் கொள்கிறதாம். 'இந்திரஜித்து பகை வென்ற லட்சணம் நன்ருயிருக்கிறது!' என்றுதான் சிரிக்கிருன். கையோடு கைகொட்டித்தோள் குலுங்கச் சிரிக்கிருன்.

சிரிப்புப் பிரவாகத்தை இடைமறித்து இடியிடிப்பது போல் ஒரு சத்தம் கேட்கிறது. விஜய கோதண்டத்தின் நாணெலியைத்தான் முதற் போரில் நன்ருகக் கேட்டிருக்கிருனே!

இடிக்கும் மேலே, 'அண்டமே வெடிக்கிறதோ!' என்று எண்ணும்படி ஒலிக்கிறது ஒரு வில்லின் டங்காரம். 'ஆஹா! லட்சுமணன் செய்யும் ஆர்ப்பாடமல்லவா?' என்கிருன் ராவணன்;

வேருெரு ஆரவாரம் வருகிறது, இந்த இடி, வெடிகளைத்தாண்டி. 'செவிட்டில் அடிப்பதுபோல் செவிகளில் வந்து அடிக்கிறது. 'அனுமன் செய்யும் ஆரவாரமா?' என்று நினைப்பதற்குள், சுக்கிரீவன் போடும் கூக்குரலும் கேட்கிறது.

ராவணன் தனக்குத் தானே சொல்லிக் கொள்கிருன்;

இடிக்கின்ற அசனி
என்ன, இரைக்கின்ற(து)
இராமன் போர்வில்;

வெடிக்கின்ற(து) அண்டம்
என்னப் படுவது
தம்பி வில்நாண்;

அடிக்கின்ற(து) என்னை
வந்து செவிதொறும்
அனுமன் ஆர்ப்பு;

பிடிக்கின்ற(து) உலகம்
எங்கும் பரிதிசேய்
ஆர்ப்பின் பெற்றி!

[அசனி — இடி. இரைக்கின்றது — இரைச்சலிடு

றது. என்னப் படுவது — என்று என் னும்படி ஒலிக்கின்றது. ஆர்ப்பு - ஆர வாரம், பரிதி சேய் - சூரிய குமாரனுன சுக்கிரீவன்.]

வேறொரு ஆரவாரம்; 'வாலி மகன் போடுகிற கூச்சல்' என்று கண்டு பிடித்து விடுகிறுன். இன்னும் ஒரு விசேஷமான கூச்சலில் நீலனுடைய கடுங்கோபம் வெளிப்படுகிறது.

மேலும் வேறு வேறு ஒலிகள் எத்தனை எத்தனையோ!—'யார் கூச்சல்?' என்று ராவணனுல் கண்டு கொள்ள முடிய வில்லை. இப்படிப் பரிசுகள் பல ஒரு சிரிப்பிற்கு!

நாகபாசத்திற்கு இந்திரஜித்து சொன்னபடி வெற்றியில்லை என்பது தெரிந்து விடுகிறது. இனிச் செய்ய வேண்டியதென்ன?

வாளும் விளக்கும் மயக்கமும்

படுக்கையிலிருந்து பளிச்சென்று இறங்குகிறுன் ராவணன். உடனே வாள் பிடித்த மெய்காவலர்கள் தலைவனைச் சூழ்ந்து கொள்கிறுர்கள்.

மாதர்கள் பொன் விளக்கு ஏந்திக் கொண்டு வருகிறுர்கள்.

தாங்கிய துகிலார்,
 மெள்ளச் சரிந்துவிழ்
 குழலார்

[துகில்-சேலை, குழல்-கூந்தல்.]

என்ற நிலையில், சேலையைச் சரியாகக் கட்டிக் கொள்ளவும் அவகாசம் இல்லா மல் அப்படியே கையால் தாங்கிய வண்ணம் வருவதையும், கூந்தல் சேர்ந்து தொங்குவதையும் பாருங்கள்!

உறக்க மயக்கம் தெளிந்த பாடில்லை;

தூங்கிய விழியார்,
 தள்ளித் துளங்கிய
 நடையார், வல்லி

வாங்கிய மருங்குல்
 மாதர் அனந்தரால்
 மயங்கி வந்தார்.

[தள்ளித் துளங்கிய - தட்டுத் தடுமாறிய, வல்லி வாங்கிய மருங்குல் - கொடியும் ஒப்பாகாமல் பின் வாங்கிய இடை. அனந்தர் - உறக்கம்.]

ராவணனுக்குப் பணி செய்யும் தேவ மாதர்கள் தூக்க மயக்கத்துடனும் மது பான மயக்கத்துடனும் வந்து கொண்டி ருக்கிறுர்கள். மது உண்டு உறங்கிக்



கொண்டிருந்தவர்கள் பளிச்சென்று எழுப்பப் பெற்றார்கள் என்பது குறிப்பு.

அச்சமயம் ஏதேதோ கனுக்கள் கண்டு கொண்டிருந்தார்கள். எழுப்பப்பட்டு வரும்போது அந்தக் கனவின் மயக்கமும் உள்ளத்தில் இருக்கத் தான் செய்கிறது.

குடி மயக்கம், குறைத் தூக்கம், கண்ட கனவின் மயக்கம் இவற்றுடன் தள்ளாடி வந்து கொண்டிருக்கும் இப் பெண்களை, ராவணனுக்கு மங்கள வாழ்த்துப் பாடிக் கொண்டிருப்பவர்களின் இன்னிசை வெறியும் சுழற்றித் தள்ளப் பார்க்கிறது!

எனவே, கண்களைத் திறப்பதும் மூடுவதுமாய்ப் பாதச் சதங்கைகள் கொஞ்சி ஒலிக்கத் தடுமாறி வருகிறார்கள்.

இந்தப் பாட்டு ஓர் அருமையான இசைச் சித்திரம்;

பானமும் துயிலும்
  கண்ட கனவும், பண்
  கனிந்த பண்ணைக்

கானமும் தள்ளத்
  தள்ளிக் களியொடும்
  கள்ளம் கற்ற

மீனினும் பெரிய
  வாட்கண் விழிப்பதும்
  முகிழ்ப்ப தாக,

வானவர் மகளிர்
  போனார், மழலையஞ்
  சதங்கை மாழ்க.

[பண்ணைக் கானமும்-ராவணனுக்குப் பாடும் மங்கள வாழ்த்துப் பாட்டுக்களின் இசையினிமையும். தள்ளத் தள்ளி-சுழற்றித் தள்ள, களியொடும்-மதக் களிப்புடன், முகிழ்ப்பதாக-மூடுவதாக. மாழ்க-மயங்க.]

நள்ளிரவிலே தூக்கம் தெளியாத நிலையில் தள்ளாடித் தடுமாறி வருகின்ற இந்த வானவ மகளிர் ராவணன் வானுலகத்தை வென்ற பொழுது கவரப்பட்டு அடிமைகளாகிச் சக்கரவர்த்தியின் குறிப்பிற்கிணங்க நடந்து கொள்ளும் பணிப் பெண்களாவர். அரக்கியரது சேர்க்கை வாசனையை இவர்களது மது பானப் பழக்கத்தில் மட்டுமா காண்கிறோம்? — இமையாத கண்கள் இமைத்து விழிப்பதிலும் காண்கிறோம். பழக்கம் அவ்வளவு கொடியது என்பது குறிப்பு.

இப் பெண்கள் அணிந்துள்ள சதங்கையின் ஒலியிலும் சோர்வும் மயக்கமும் பிரதிபலிக்கின்றன.

மழலையஞ் சதங்கை
  மாழ்க.

மெள்ளச் சரிந்து விழும் கூந்தல்தான் எவ்வளவு வசீகரமாய்க் காண்கிறது:

மழையினை நீலம்
  ஊட்டி, வாசமும்
  புகையும் ஆட்டி,

உழைஉழை சுருட்டி
  மென் பூத் தொடுத்(து),
                    இடைக்(கு)
  இடையூ(று) என்னப்

பிழையுடை விதியார்
  செய்த பெருங்குழல்
  கருங்கண்—செவ்வாய்

இழைஅணி மகளிர்
  சூழ்ந்தார் அனந்தரால்,
  இடங்கள் தோறும்.

[மழையினை — மேகத்திற்கு, உழை உழை — இடையிடையே, என்ன—என்று கருதாத. விதியார் — விதி என்பவர், குழல் — கூந்தல். இழை அணி — ஆபரணம் அணிந்த.

மெள்ளப் பேசிக்கொண்டும் அங்கும் இங்கும் பார்த்துக் கொண்டும் அந்தப் பேச்சும் கண்களும் தாம் மயங்கிய நிலையிலும் எப்படி மயக்குகின்றன!

தேனிடைக், கரும்பில்,
  பாலில், அமுதினில்
  கிளவி தேடி,

மானிடைக், கயலில்,
  வாளில், மலரிடை
  நயனம் வாங்கி,—

[கிளவி — சொற்கள், மானிடை — மானிடத்திலும், கயலில் — கயல் மீன்களிடத்திலும், நயனம்—கண்கள்.]

படைத்திருக்கும்போது, வசிய சக்தியைச் சொல்லவா வேண்டும்?

இப்பெண்கள் காதில் வானர வீரர்களின் ஆரவாரம் வந்துவிழுந்ததும், இடியோசை கேட்ட நாகம் போல் நடுங்கி ஒடுங்குகிறார்கள். உறக்க மயக்கம், அழுகு—மயக்கம் எல்லாம் கலந்து போகின்றன.

அந்த நட்ட நிசியில் பொன் விளக்குகள் நடுங்குகின்றன!

காவியத்துள் ஒரு வீரகாவியம்

கதையும் காட்சியும்



பி.ஸ்ரீ

7

ஒரு பிரசித்தமான போரில் வெற்றி பெற்று வந்தான் ஒரு பெரு வீரன். 'இன்னும் சிற்சில வெற்றிகள் இப்படியே கிடைத்து விட்டால் நமது கதி அதோ கதி தான்!' என்றானாம். இந்திரஜித்து அடைந்த வெற்றியும் இது !

கதை சொல்லும் கலை

இந்திரஜித்தின் பொன்மாளிகைக்கு ராவணன் வந்து சேர்ந்ததும் வெற்றி வீரனை எந்த நிலையில் பார்க்கிறான்? லட்சுமண பாணங்களால் துளைக்கப் பட்டு உடம்பெல்லாம் புண்கள், இரத்த குமிழியிடுகிறது. தாங்க முடியாத வேதனையால் சோர்ந்து கிடக்கிறான். சிங்கத்தால் வலியழிந்து செயலற்று ஒடுங்கிக் கிடக்கும் யானை போலக் காணப் படுகிறான். இதுவோ வெற்றி!

தந்தையைக் கண்டதும் நினைவு வருகிறது. அடிகளில் வணங்க வேண்டும் என்ற விருப்பம் எழுகிறது. எழுந்திருக்க முடிந்தால் தானே !

கிடந்தபடியே இரு கைகளையும் தலைமேற் கொண்டு வணக்கம் செலுத்த விரும்புகிறான். இந்த நோக்கம் தான் எளிதில் நிறைவேறுகிறதா ?

ஏதோ ஒரு பெருந் தொழிலைச் செய்து முடிப்பது போலவே கைகளைத் தலைமேல் ஏற்றிக் கொள்கிறான்.

மகனுடைய நிலை கண்டதும் ராவணனுடைய மனநிலைதான் என்ன ?

எழுந்(து)அடி வணங்க —
லாற்றான், இருகையும்
அரிதின் ஏற்றித்
தொழும் தொழி லானை
நோக்கித் துணுக்குற்ற
மனத்தன்

[வணங்கலாற்றான் - வணங்கவும் இயலாதவனாய். அரிதின் - வெகு சிரமத்துடன். துணுக்குற்ற - திடுக்கிட்ட. மனத்தன் - மனமுடைய ராவணன்.] என்ற கவிதைப் பகுதியில் இருவர் நிலையையும் உள்ளபடி காண்கிறோம்.

மகனுடைய இந்த நிலையைத் தந்தை எப்படி எதிர் பார்த்திருக்க முடியும்? தன்னிடம் வந்து செய்தி சொல்லும் போது மகனுடைய நிலை இப்படி யில்லையே!

'பகைவர்களால் புதிதாக ஏதேனும் தீங்கு நேர்ந்து விட்டதோ!' என்று கூட எண்ணுகிறான், கேட்டே விடுகிறான்.

இந்தக் கேள்விக்கு இந்திரஜித்து உடனே பதில் சொல்லி விடவில்லை. ராவணன் நெருங்கி வந்து அடுத்தடுத்து வினவிய பின்பே, மகன் அந்த வினாவைத் தெரிந்து கொண்டு மறுமொழி சொல்லுகிறான்.

வெற்றிக்கு இவன் கொடுத்திருக்கும் விலையைத் தான் எவ்வளவு இயற்கையாகக் காட்டுகிறது இந்தத் தளர்ச்சி !

லட்சுமண பாணங்கள் தன்னைப் படுத்திய பாட்டைச் சற்று விவரிக்க முயல்கிறான். தளர்ந்து கண்கள் சொருகிப் போகவும் மாயையால் தப்பி மறைந்ததாக ஒப்புக் கொள்கிறான்.

"அப்படித் தப்பவில்லையென்றால் அப்பொழுதே செத்துப் போயிருப்பேன்!" என்று குறிப்பாகத் தெரிவிக்கிறான்.

தேவேந்திரனுடன் போர் புரிந்திருக்கிறான். சிவபெருமானுடனும் திருமா

லுடனும் போர் புரிந்ததாகச் சொல்லுகிறான். அப்போது இப்படி வருந்தியதில்லை என்கிறான்.

'இளையவன் தன்மை இது என்றால் ராமனது வல்லமையை நம்மால் எண்ணவும் முடியாது' என்கிறான். ஏற்கெனவே வெற்றி கிடைத்து விட்டதாக முரசடித்துச் செய்தி சொன்னவன், இப்போது 'நமக்கு மேலும் வெற்றி உண்டாகுமென்று துணிந்திருக்க வேண்டாம்' என்று ராவணனை நோக்கி எச்சரிக்கை செய்கிறான்.

லட்சுமணனையும் வானர வீரர்களையும் கொன்று விட்டதாகவே இந்திரஜித்து நினைக்கிறான். ஆனால் அந்த வெற்றிக்குத் தன்னுடைய வல்லமை காரணமல்ல என்கிறான்;



வென்றது பாசத்
தாலும் மாயையின்
விளைவி னாலும்!

லட்சுமணனுடைய வில்லின் ஆரவாரம் விண்ணை இடித்துச் சில நிமிஷங்களும் ஆகவில்லையே! எனினும், லட்சுமணனைக் கொன்று விட்டதாக அல்லவா இந்திரஜித்து சொல்லுகிறான்? பெருந் திகைப்புடன் ராவணன்,

போரொலி ஒன்றும்
ஐய! அறிந்திலை
போலும்!

[போர் ஒலி — போர்க்களத்தில் புதியதொரு போருக்கு ஆயத்தமாகி விட்டதுபோல் ஆரவாரித்த ஓசை. அறிந்திலை — அறிந்தாயில்லை.]

என்று கூறுவதில் அதிசயம் இல்லையே'

உண்மையில் அந்தப் பேரொலியோ, போரொலியோ இந்திரஜித்தின் காதில் விழவில்லை. அப்படித் தன் வேதனைக்குள்ளேயே மூழ்கிப் போய்விட்டான்! தந்தை பேச்சில் இப்போது மகனுக்குச் சந்தேகம்தான்.

கொடிய நாக பாசத்தால் கட்டுப்பட்டவர்கள் உடல் பிளக்கப்பட்டு உணர்வு ஒழிந்து கிடந்ததைக் கண்ணால் கண்டு தானே களத்தை விட்டு வந்தான்? அந்தக் கண்களை நம்புவதா? தன் காதில் விழாத ஏதோ ஒரு பெருஞ் சத்தத்தைக் கேட்டதாகத் தந்தை சொன்னதை நம்புவதா?

இப்போது தந்தையை மகன் நம்பவில்லை; மகனைத் தந்தை நம்பவில்லை. இனிமேல் கதை நடக்க வேணுமே!

'கதைக்குக் கால் உண்டா?' என்று சொல்வதுண்டு. கால் இருந்தால்தான் கதையும் நடக்க முடியும்.

கதை சொல்லுகிறவனது கலைத்திறன்தான் கதைக்குக் கால் கொடுக்கிறது; மனோபாவத்துடன் கூடிய முன் யோசனைதான் அந்தக் காலைச் சரியாக நடக்கச் செய்கிறது.

என்ன முன் யோசனை!

இப்போது கம்பனது முன் யோசனையைப் பார்க்கலாம். கதையிலே இது ராவணன் முன் யோசனைதான்! 'எப்படி?' என்று பார்ப்போம்.

விண்ணையிடித்த ஆரவாரம் கேட்டு ராவணன் திடுக்கிடவில்லை; இந்திரஜித்தின் எதிர்பாராத நிலை கண்டுதான் திடுக்கிட்டான்.

அந்த மன அமைதியில் முன் ஏற்பாடாக, லட்சுமணன் முதலியோரின்



நிலையை விவரமாகத் தெரிந்து வரும்படி தூதர்களைப் போர்க்களத்திற்கு அனுப்பி வைத்த பிறகே ராவணன் இந்திரஜித்தைப் பார்க்க வந்தான் என்பது கவிஞன் குறிப்பு.

அந்தத் தூதர்கள் இப்போது, தந்தையும் மகனும் ஒருவர் பேச்சில் ஒருவர் ஈடுபட்டிருக்கும் நிலையில் வந்து சேர்ந்து, தாம் அறிந்து வந்த செய்திகளைத் தெரிவிக்கிறார்கள். இந்த நாடகத்திறன் தான் தந்தை பேச்சில் மகனுக்கு நம்பிக்கையை உண்டாக்கிக் கதையை மேலே நடத்தி வைக்கிறது.

மேல் யோசனை

(இருவர் குறைநிசயம்)

கருடன் வந்ததும், நாகபாசம் அழிந்ததும் ஆகிய நிகழ்ச்சிகளைத் தெரிந்து கொண்டதும் ராவணன் கருடனைப் பரிகசிக்கிறான், பழிக்கிறான். பிறகு இந்திரஜித்தை நோக்கி, ' அது கிடக்கட்டும்; நீ மறுபடியும் சண்டைக்குப் போய் எதிரிகளை அழித்துவிடவேண்டும். ஒருதடவை

இறந்தவர்களை மறுபடியும் கொன்று தீர்த்து விட்டால் கருடன் வெட்கப்படுவான்!' என்று சொல்லுகிறான்.

ஆனால் இந்திரஜித்தின் சிரமம் இந்திரஜித்துக்குத்தானே தெரியும்? நேரில் கண்டதும் திடுக்கிட்ட ராவணனே இந்திரஜித்தை மீண்டும் போர் செய்யத் தூண்டுகிறான். ராவணனது போராசையும் பேராசையும் எந்தத் தியாகத்திற்கும் பின் வாங்குவதில்லை — அருமை மகனைத் தியாகம் செய்வதற்குக் கூட!

இந்திரஜித்தோ, 'நம்முடைய சிரமத்தைக் கூடப் பாராமல் தந்தை மீண்டும் போர் செய்யச் சொல்லுகிறாரே!' என்று நினைத்துப் பார்க்கவேயில்லை. 'உன் விருப்பத்திற்கிணங்க நாளைப் போர் புரிவேன்; இன்று ஒரு நாள் மாத்திரம் ஓய்வு கொண்டு என் சிரமத்தைப் போக்கிக் கொள்வேன்' என்கிறான்.

'அப்படியே செய்' என்று உடன்பட்டு ராவணன் தன் அரண்மனைக்குத் திரும்புகிறான்.

வால்மீகியின் கதைப் போக்கு

வால்மீகத்தில் நாகபாசக் கதை ராமன் இலங்கையை முற்றுகை செய்த துமே யுத்த ஆரம்பத்தில் நடைபெறுகின்றது.

வானரர்களுக்கும் அரக்கர்களுக்கும் இடையே நேர்ந்த யுத்தம் நேர்ந்த போது, இந்திரஜித்து அங்கதனால் தன் தேர் முதலியவற்றை இழந்ததும், மாயையால் விண்ணிலே மறைந்து நின்று நாகாஸ்திரங்களைப் பிரயோகிக்கிறான். ராம லட்சுமணர்கள் சர்ப்ப ரூபமான பாணங்களால் கட்டப்பட்டும், கடிக்கப்பட்டும் மூர்ச்சித்துக் கீழே விழுந்து விடுகிறார்கள்.

வானர வீரர்களையெல்லாம் பாணங்களால் வருந்தச் செய்தபின், இந்திரஜித்து ராவணனிடம் சென்று வெற்றிச் செய்தியைத் தெரிவிக்கிறான். ராவணன் கட்டளைக்கு இணங்க அரக்கியர் சீதையைப் புஷ்பக விமானத்தில் ஏற்றிக் கொண்டு போய்ப் போர்க்களத்திலே மூர்ச்சித்துக் கிடக்கும் ராம லட்சுமணர்களை அவளுக்குக் காட்டுகிறார்கள். சீதையை திரிஜடை தேற்றுகிறாள்.

ராமன் மூர்ச்சை தெளிந்து லட்சுமணனைப் பற்றித் துக்கம் அடைகிறான். கடைசியாகக் கருடன் தோன்றவே, ராம லட்சுமணர்கள் நாகபாசத்திலிருந்து விடுதலை அடைகிறார்கள்.

கருடன் தழுவிக் கொண்டதும் ராம லட்சுமணர்களுக்குப் புண்களெல்லாம் நீங்கி முன்னையினும் பலம் அதிகரித்திருக்கிறது. அப்பால் வானரர்கள் குதூகலமாகச் சிங்கநாதம் செய்கிறார்கள்.

அந்த நடுநிசியில் இந்தப் பேராரவாரம் கேட்டு ராவணன் திடுக்கிட்டுப் போகிறான். தூதர்களால் செய்தி அறிந்து போரைத் தொடர்ந்து நடத்துகிறான்.

கும்பகர்ணன் வதத்திற்கு முன்பே நாகபாச நிகழ்ச்சி வந்து விடுகிறது வால்மீகத்திலே. அதிகாயன் வதத்திற்குப் பின் இந்திரஜித்து மறுபடியும் போர் செய்யப் புறப்படுகிறான்.

கம்பன் இந்தக் கதைப் போக்கை மாற்றி அமைத்துக் கொள்ளும் முறை கவனிக்கத் தக்கது. தனது காவியச் சிற்பத்திறனுக்கும் நாடகத் திறனுக்கும் ஏற்றவாறு கம்பன் செய்து கொண்டிருக்கும் விசேஷ மாறுதல்களில் இந்திரஜித்தின் வீர காவியப்போக்கு நமது ஆழ்ந்த கவனத்திற்கு உரியது.

* * *

கம்பனது இந்திரஜித்தின் குணசித்திரத்தை நன்றாகத் தெரிந்து கொள்வதற்கு, ராவணன் இந்திரஜித்தை அவன் மாளிகையில் போய்ச் சந்தித்த இந்தக் காட்சியும் இன்றியமையாததே.

தந்தையையும் கண்டித்துப் பேசக் கூடிய தைரியசாலி இப்போது தன்னுடைய சிரமமான நிலையையும் பெரிதாகக் கருதாமல் தந்தையின் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து நடக்கச் சித்தமாயிருக்கிறானல்லவா?

தன் பெரும் புகழுக்காக, பேராசைக்காக, ஏகாதிபத்திய மாட்சிக்காக, சர்வாதிகார வெறிக்காக, ராவணன் தன் அருமை மகனுடைய சுகதுக்கங்களையும் நினைத்துப் பாராததுபோல், இத்தகைய ராவணனுக்காக இந்திரஜித்தும் தன்னைக் குறித்துச் சிந்தை செய்யாமலே எத்தகைய தியாகத்திற்கும் சித்தமாயிருக்கிறான்'

இந்தக் குணாதிசய அம்சத்தை எவ்வளவு தெளிவாக இந்தக் காட்சியில் காண்கிறோம்!

காவியத்துள் ஒரு வீர காவியம்

விண்ணும் கண் மூடியது

பி. ஸ்ரீ

8

இந்திரஜித்து இரு முறை வெற்றி பெற்றான். ஒன்று நாகபாச வெற்றி; மற்றது பிரமாஸ்திர வெற்றி. பல்வேறு மாயச் செயல்களாலும் எதிரிகளைக் கலங்கச் செய்தான். சுருங்கச் சொன்னால், ராமனது வெற்றிக்கு இந்திரஜித்தைப்போல் வேறு எவருமே இடையூருக இருக்கவில்லை என்பது நிச்சயம்.

ஓய்வும் பூரிப்பும்

நாகபாச வெற்றி நிலைபெறவில்லை என்று தெரிந்தும் இந்திரஜித்து அதைரியம் அடையவில்லை; நம்பிக்கையை இழக்கவேயில்லை. 'ஓய்வு கொள்ள வேண்டும்; பிறகு புதிய ஊக்கத்துடன் புறப்பட்டு வந்து எதிரிகளை அடியோடு அழித்துவிட வேண்டும்' என்பதுதான் இந்திரஜித்தின் மனநிலை.

இந்திரஜித்து ஓய்வு கொண்டிருக்கும் சமயத்தில், போர் தொடர்ந்து நடக்க வேண்டுமல்லவா? அது குறித்து ராவணன் ஆலோசிப்பதற்குள், அரக்கர்களின் போர் விருப்பமே ஆலோசனை செய்து பார்க்க வேண்டிய சிரமத்தை எவ்வளவோ குறைத்து விடுகிறது.

குறித்த இரண்டு படைத் தலைவர்களின் தலைமையில் போர் நடக்கவேண்டுமென்று ராவணன் கருதினான். ஆனால் அந்தத் தலைவர்கள் இந்திரஜித்தைப் போர்க்களத்தில் தனியே விட்டு வந்தவர்கள் என்று தெரிந்ததும், அவர்கள் மீது கோபம் பொங்கி விட்டது. உடனே அவர்கள் மூக்கை அறுக்கும்படி உத்தரவு பிறந்தது.

கோபம் ஆறியபின், அதே தலைவர்கள் சபதம் செய்து போருக்குச் செல்ல விடை பெற்றுக் கொள்கிறார்கள். அவர்களுடன் பக்க பலமாக வேறு சிலரும் செல்கின்றனர்.

இந்தப் படைத் தலைவர்கள் வதமாகி, கரனுடைய புதல்வனை மகரக்கண்ணனும் வதமாகிறான். ராவணன் வேறு வழியில்லாமல் இந்திரஜித்தை விரைவில் அழைத்து வருமாறு பணியாளர்களை ஏவுகிறான்.

இதற்குள் களைப்பாறிப் புதிய ஊக்கம் பெற்ற இந்திரஜித்து உடனே போருக்குப் புறப்படுகிறான். 'தந்தை அழைத்தார்' என்று தூதுவர் தெரிவித்ததுமே, இந்திரஜித்தின் தோள் குன்றெனத் திரண்டு பூரிக்கிறது.

'போருக்குப் போனவர் யாவரும் அப்படியே போய் விட்டார்கள் போலும்!' என்று இந்திரஜித்து கேட்டுக் கொண்டே ராவணனை நோக்கி வருகிறான்.

அந்தப் பணியாளர்களும் இந்திரஜித்தைப் புகழ்வதுபோல் 'அந்தப் போர்க்களம் செல்பவர்களில் மீள வல்லவர் உங்களைத் தவிர வேறு யார் இருக்க முடியும்?' என்ற சற்று அசட்டுத்தனமாகவோ, குறும்புத்தனமாகவோ பதில் சொன்னார்கள்:

ஏயின பின்னை
மீள்வார் நீ அலா(து)
யாவர்?

[ஏயின பின்னை—ஏவினபின்; ராவணனால் போருக்கு ஏவப்பட்ட பின்.]

இந்திரஜித்தோ அவர்கள் என்ன சொன்னார்கள் என்பது குறித்துச் சிந்திக்கவேயில்லை. அந்தச் சொல் நயங்களையோ, தொனிப் பொருள்களையோ நினைத்துப் பார்க்க அவகாசம்தான் ஏது?

'இருவர் மேல் ஒருவன்'
(வீரம், கோபம், அதிசயம்)

பூரிப்பு—நிலையிலேயே ராவணனை நோக்கி இந்திரஜித்து, 'நரரையும் வானரரையும் முடித்து விடுவேன்; ராம லட்சுமணர் பிணமாய்க் கிடப்பதைச் சீதை காண்பாள்! தேவர்களும் காண்பார்கள்; நீயும் காண்பாய்' என்று சொல்லி விட்டு, வலங்கொண்டு வணங்

இப் போருக்குரிய வாத்தியங்கள் முழங்கப் புறப்படுகிறான். யானைக் கூட்டம், குதிரைக் கூட்டம், தேர்க் கூட்டம், அரக்கர் கூட்டம் எல்லாம் திரண்டு போகின்றன.

பல தேர்களினிடையே தோன்றும் இந்திரஜித்தின் வீரப் பொலிவை,

> தூயபொற் சுடர்கள்
> எல்லாம் சுற்றுற
> நடுவண் தோன்றும்
>
> நாயகப் பரிதி
> போன்றான், தேவரை
> நடுக்கம் கண்டான்

[தூய பொற் சுடர்கள்—பரிசுத்தமான பொன் மயமான சுடர்கள். சுற்றுற—சுற்றி நிற்க. நாயகப் பரிதி — சூரியச் சுடர்களுக்குத் தலைவனான சூரியன், நடுக்கம் கண்டான்—நடுங்கச் செய்தவனாகிய இந்திரஜித்து.]
என்று காட்டுகிறது கவிதை.

இந்திரஜித்தின் சங்க நாதமே இப்போது வானரர்களைப் பயமுறுத்தி நிலை கெட்டோடச் செய்கிறது. நாகபாசத்தால் பட்டபாடு நினைவில் இருக்கத்தானே செய்யும்! சங்கநாதத்துடன், நாணொலியும் சேர்ந்து கொண்டதும் சில வானரங்கள் செவி கிழிந்து மனம் இடிந்து வாய் உலர்ந்து, 'செத்தே போனோம்!' என்று தமக்குள் சொல்லிக் கொள்கின்றனவாம்.

சுக்கிரீவன் முதலிய சிலர் அன்றி மற்றையோர் நிலை கெட்டு ஓட, அரக்கர்கள் உத்ஸாகம் அடைகிறார்கள். யுத்த சன்னத்தராக இருந்த நீலன் முதலான வானரப் படைத் தலைவர்களை நோக்கி ராமன், 'இந்திரஜித்தின் கொடிய படைகளைத் தாங்கும் வல்லமை உங்களுக்கு இல்லை; 'நீங்கள் பின் வரிசையில் நில்லுங்கள்: நின்று, என் வில்-தொழிலைக் காணுங்கள்' என்று கூறுகிறான்.

தம்பி லட்சுமணனும் அண்ணனுக்குத் துணையாகவே, இருவர் போர்த் திறனையும் ஒருங்கே கண்டு வியக்கின்றான் இந்திரஜித்து. இவனை 'வீரருள் வீரன்' என்பது கவிக் கூற்று.

இந்த வியப்பை,

> அம்பின்மா மழையை
> நோக்கும்; உதிரத்தின்
> ஆற்றை நோக்கும்

[உதிரத்தின்-இரத்தத்தின்.]
என்று வருணிக்கத் தொடங்கும் பாட்டு, 'வீரர் சுந்தரத் தோளை நோக்கும்' என்று அதிசயமாக முடிவதைப் பாருங்கள்.

இப்படி ராமலட்சுமணர் அரக்கரில் பெரும்பாலோரை அழித்த பின்பும் வானரசேனை இந்திரஜித்திடம் உள்ள அச்சத்தால் திரும்பி வரவில்லையாம். அரக்கர் சேனையிலோ பெரும்பாலோர் இறந்தது கண்டு எஞ்சியுள்ளவர்களிலும் சிலர் அஞ்சி நின்றார்களாம்.

அப்படி அஞ்சி நின்றவர்களைக் கோபித்து நோக்கி இந்திரஜித்து, 'அஞ்சினவர்களே! நீங்கள் திரும்பி ஊருக்கே போய்த் தொலையுங்கள். நீங்களும் செத்துப் போனவர்களே!' என்று சொல்லி விட்டு, தான் ஒருவனாகவே ராம லட்சுமணர்களை எதிர்த்து வருகிறான்.

இந்த வருகையை,

> இருவர்மேல் ஒருவன்
> வந்தான்

என்று வருணிக்கும் எளிமையைத்தான் பாருங்கள்!

தமிழின் சக்தி

ராம லட்சுமணர் செய்த பயங்கரமான போரை வருணித்து விட்டு, இந்திரஜித்தே வியந்ததாகவும் திகைத்ததாகவும் காட்டி விட்டு,



செத்தவரும் சாகாத வருமான அரக்கர் படையையும் சுட்டிக் காட்டி விட்டு, அந்த ' இருவர் மேல் ஒருவன் வந்தான் ' என்று கூறும்போது சாதாரணத் தமிழ்ச் சொற்களுக்குத்தான் எவ்வளவு சக்தி வந்து விடுகிறது!

புல்லையும் ராம பாணமாகப் பிரயோகிக்கக்கூடிய சக்தி ராமனுக்கு உண்டு என்பர்.

புல்லினில் வயிரப்படை
தோன்றுங்கால்,

பூதலத்தில் பராசக்தி
தோன்றுமே!



என்று பாரதியார் பாடியிருக்கிறரல்லவா? புல்லை வஜ்ராயுதமாகவும் ராம பாணமாகவும் செய்து மகா சக்தியைப் புலப்படுத்தும் ஆற்றல்தான் வெள்ளைத் தமிழ்ச் சொற்களில் கொள்ளை கொள்ளையாக உணர்ச்சிகளைக் கொட்டி வைத்திருக்கும் மகா சக்தியும்!

இந்திரஜித்தின் கோபப் பேச்சு அரக்கருள்ளத்தில் ரோஷத்தை மூட்டி விடுகிறது. சாம்பல் என்று எண்ணிய இடத்திலே உள்ளுக்குள்ளேயிருந்து கனன்று சீறித் தீ நாக்கை நீட்டி எழுவது போல், அரக்கர்கள் அச்சம் துறந்து அபாயம் மறந்து இந்திரஜித்தைச் சூழ்ந்து ஜொலிக்கிறர்கள். ஒரு வீர உள்ளம் எத்தகைய அற்புதத்தைச் செய்து விடுகிறது பாருங்கள்!

தானும் தேரும் சங்குமாய்

லட்சுமணன் தானே போர் செய்து இந்திரஜித்தின் தலையை வீழ்த்துவதாகச் சபதம் செய்கிறன். ராமனும் லட்சுமணனைக் கொண்டாடிக் குதூகலப்படுத்துகிறன்.

அரக்கர் சேனை அழிந்து போக இந்திரஜித்து தானும் தேருமாகத் தனிப்பட்டு நிற்கிறன்.

தானும் தேருமே
ஆயினன் இராவணன்
தனயனே

[தனயன்—மகன்.]

என்பது கவிக் கூற்று.

இந்த நிலையிலும் இந்திரஜித்து ராம லட்சுமணரை நோக்கி, 'இருவரும் சேர்ந்து என்னுடன் போர் செய்யப் போகிறீர்களா?' என்று கேட்கிறன். 'அன்றி, உங்களில் ஒருவர் வந்து போர் செய்யப் போகிறரா?' என்றும் கேட்கிறன்.

'நீங்கள் சேர்ந்து சாகப் போகிறீர்களா, அல்லது தனித் தனியாகச் சாக விருப்பமா?' என்பது தான் இவன் கேள்விகளின் பொருள்.

இந்தக் கேள்விகளுக்கு விடையாக லட்சுமணன், 'நான் உன்னைக் கொல்லுமாறு சபதம் செய்திருக்கிறேனே!' என்கிறன். இந்திரஜித்தோ, 'அப்படியாஞல் உன்னைக் கொன்று பின்பு உன் அண்ணனைக் கொல்வேன்!' என்று பதில் சொல்லுகிறன். 'இந்த ஒரே வில்லிஞல் வானரப் படையையும் ஒழித்து விடுவேன்' என்கிறன்.

இறந்து போன தம்பிமார்க்கும் சிறப்புறுகிய கும்பகர்ணனுக்கும் ராம லட்சுமணரின் இரத்தத்தைக் கொண்டு நீர்க்கடன் கழிக்கப் போவதாகவும் இந்திரஜித்து சொல்லுகிறன். இப்படிச் சொன்னதுமே கடும்போர் விளைக்கத் தொடங்குகிறன்.

அச்சம் உற்றனர்,
கண்புதைத்(து) அடங்கினர்
அமரர்!

தேர் இழந்தும், கவசம் இழந்தும் இந்திரஜித்து அஞ்சாது போரைத் தொடர்ந்து நடத்துகிறன்.

ஒற்றைச் சங்(கு)எடுத்(து)
ஊதினன் உலகெலாம்
உலைய!

மேலும் மேலும் லட்சுமணன் உக்கிரமாகப் போர் செய்தது கண்டு இந்திரஜித்து ஆகாயத்தில் மறைந்து போரைத் தொடர்ந்து நடத்த விரும்புகிறன். இந்த நிலையில் லட்சுமணன் 'பிரமாஸ்திரத்தைத் தொடுத்து எதிரியை ஒழித்து விடுவேன்' என்று ராமனிடம் தெரிவிக்கிறன்.

ராமனே, 'பிரமாஸ்திரம் தொடுப்பதால் உலகத்திற்குக் கேடு நேர்ந்துவிடும்; அப்படிச் செய்வது அறமன்று' என்று சொல்லி லட்சுமணன் பிரமாஸ்திரத்தைத் தொடுக்காதவாறு ஏற்கெனவே தடுத்திருக்கிறன்.

மறைந்து நின்ற இந்திரஜித்து இவர்கள் எண்ணத்தை அறிந்து கொண்டு, தானே பிரமாஸ்திரத்தைவிட்டு வெற்றி பெறுவதாகத் தீர்மானித்து அப்படியே மறைந்த வண்ணம் அப்பால் போய்விடுகிறன்.

இவன் கருத்தை உணர்ந்து கொள்ளாத ராமலட்சுமணர் இந்திரஜித்து அஞ்சிப் போய்விட்டதாகவே நினைத்துக் கொண்டிருக்கிறர்கள். விபீஷணனே சேனைகளுக்கு உணவு கொண்டு வரப் போகிறன்.

லட்சுமணன் மட்டும் வானர சேனைக்குக் காவலாக இருக்கிறன். விண்ணவர் பூமழை பொழிகிறர்கள்.

விண்ணும் கண்ணைப் பொத்திக் கொண்டது என்று சொல்லும்படி, சூரியாஸ்தமனம் ஆகிறது. ஒரு பயங்கர இரவைத் தோற்றுவிக்கப் போகும் சூரியாஸ்தமனம்!

காவியத்துள் ஒரு வீர காவியம்

அழகன் அழுதான்

பி. ஸ்ரீ.

9

மறைவாக இருந்து இந்திரஜித்து ஒரு முழு வெற்றிக்கு, எதிரிகளின் ஸர்வ நாசத்திற்கு, வழி தேடிக்கொண்டிருக்கிறான். விண்ணும் மண்ணும் நடுங்கிக் கண்மூடிக் கொள்ளும் வெற்றி அது; ராமனையும் அழச் செய்யப் போகும் வெற்றி!

ஆனால் ராம லட்சுமணர்களே வெற்றி பெற்று விட்டதாகத் தேவர்கள் சிரித்துக் கொண்டிருக்கிறார்கள் வான வீதியிலே. கீழே போர்க் களத்திலோ, முன்பு தோற்றோடிய வானரர்களும் களிப்பால் ஆரவாரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதே சமயம் இந்திரஜித்து இலங்கைக்குப் போய் விடுகிறான். விபீஷணனும் இந்திரஜித்தின் திறத்தை மறந்து விட்டது போலக் களத்தை விட்டு உணவு கொண்டு வரப் போயிருக்கிறான்.

ராமனும் போர்க்களத்தை விட்டுப் போக, இளையவன் சேனையைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறான். இந்த நிலையில் தான் இடி விழுகிறது, மின்னாமல் இடிக்காமல்.

மாயத்திற்கு மேல் மாயம்

தன்னுடைய சூழ்ச்சியை இந்திரஜித்து ராவணனிடம் தெரிவிக்கிறான். அந்தச் சூழ்ச்சியை நிறைவேற்ற இந்திரஜித்துக்கு அவகாசம் கிடைப்பதற்காக, ராவணன் ஆணையால் மகோதரன் முதலான அரக்கர்கள் போருக்குப் புறப்படுகிறார்கள். இந்த அரக்கர்களுக்கும் வானரர்களுக்கும் கைகலந்த போர் நடைபெறுகின்றது.

இந்தப் போரில் லட்சுமணனும் அனுமனும் அரக்கர் சேனைக் கடலைக் கலக்குகிறார்கள்: மகோதரன் மாயப் போர் புரிந்து கொண்டிருக்கிறான்.

தேவேந்திரன் தேவர் முதலியவர்களோடு வானரர் மீது படையெடுத்து வந்து விடுகிறான்! முனிவர் முதலியோரும் சினந்து வருகிறார்கள்! வானரர்கள் திகைத்து நிற்கிறார்கள்.

'இது என்ன விபரீதம்!' என்று லட்சுமணன் திகைத்து அனுமனை வினவிக் கொண்டிருக்கிறான்.

திடீரென்று ஒரு பொன் மலை மீது குருவிகள் இறங்கி வந்து மொய்ப்பது போல, ஒளிமயமான கொடிய அம்புக் கூட்டங்கள் லட்சுமணன் மேனியில் பாய்ந்து மொய்க்கின்றன.

'செய்வது இன்னது' என்பது தெரியாமலே, என்ன நடக்கிறது என்பதும் தெரியாமலே லட்சுமணன் உணர்வொடுங்கிப் போகிறான்.


'இந்திரன் நம்மோடு ஏன் போருக்கு வந்தான்?' என்ற லட்சுமணன் கேள்விக்குச் சிந்தித்து விடைகாண முயன்றான் அனுமன். அந்த மனக்கலக்கத்திலே ''அதற்குக் காரணம் என்ன ஆனாலும் சரி'' என்று சொல்லிக் கொண்டே, வந்த இந்திரனை வெள்ளை யானையுடன் தூக்கி யெறிந்து விட வேண்டும் என்று கிளம்புகிறான்.

கிளம்பியதுமே, எண்ணிறந்த அம்புகள் பாய்ந்து வருகின்றன. உடனே அனுமனும்,

நினைவும் செய்கையும்
மறந்துபோய் நெடுநிலம்
சேர்ந்தான்.

சுக்கிரீவனும் அம்புகள் தாக்கத் தரையில் விழுந்து விடுகிறான். இடி விழுந்த

ஆண்சிங்கம் போலச் சாய்ந்து விடுகிறன் அங்கதன். ஜாம்பவான் முதலானவர்களும், மார்பையும் தோளையும் அம்புதுளைக்க, உயிர்குன்றி விழுகிறுர்கள். வானரங்களெல்லாம் இரத்தக் கடலில் கிடக்கின்றன.



சிதா.வேகா

மகனும் தந்தையும்

இந்திரஜித்து வெற்றிச் சங்கு ஊதிக்கொண்டு ராவணனை அடைகிறன்.

வெங்கண் வானரக்
  குழுவொடும் இளையவன்
விளிந்தான் ;
'இங்கு வந்திலன்,
  அகன்றனன்
இராமன்!' என்(று)
  இகழ்ந்தான் ;
சங்கம் ஊதினன்,
  தாதையை வல்லையிற்
சார்ந்தான்,
பொங்கு போரிடைப்
  புகுந்துள பொருளெலாம்
புகன்றன்.

[வெங்கண் வானரக் குழு — கொடிய கண்களையுடைய வானரக் கூட்டங்கள். விளிந்தான் — இறந்தான். இங்கு வந்திலன் — இப் போர்க்களத்தில் வராதவனுய். அகன்றனன் —அப்பால் போய் விட்டான். சங்கம் — சங்கு. தாதை — தந்தையாகிய ராவணன். வல்லையில் சார்ந்தான் - விரைவில் அடைந்து. புகுந்

துள பொருளெலாம் - நடந்த காரியங்களை யெல்லாம்.]

ராமனும் அப்பால் போகாமல் போர்க்களத்தில் இருந்தால் தப்பியிருக்க மாட்டானே என்ற எண்ணம் இந்திரஜித்துக்கும் உண்டு; ராவணனுக்கும் உண்டு. ஆனால் அந்த எண்ணம் தோன்றியும் இந்திரஜித்து அதை இப்போது பிரமாதப் படுத்தவில்லை. அது குறித்து இகழ்ச்சி — மனப்பான்மை தான் இந்திரஜித்துக்கு.

ராவணனுக்கோ அந்த எண்ணம் கவலையே தருகிறது. முதல் நாள் யுத்தத்தில் ராமனது வில்—திறனையும், 'இன்று போய்ப் போர்க்கு நாளை வா!' என்ற அந்தப் பேராண்மையையும் அறிந்து கொண்டிருப்பவன் ராவணன் தானே!

'இறந்தி லன்கொல்அவ்
இராமன்?' என்(று) இராவணன்
இசைத்தான்.

[இறந்திலன் கொல் — இறந்தானில்லையோ.]

இந்தக் கேள்வியில் ராவண னுள்ளம் படும்பாடு தொனிக்கிறதல்லவா? ஆனால் இந்தக் கேள்வி இந்திரஜித்துக்கோ வெற்றிப் பெருமிதத்தைச் சற்றுப் புண் படுத்துவது போலத் தோன்றுகிறது:

இந்திரஜித்து பதில் சொல்லுகிறான்:

'துறந்து நீங்கினன்;
அல்லனேல், தம்பியைத்
தொலைத்துச்
சிறந்த நண்பரைக்
கொன்றுதன் சேனையைச்
சிதைக்க,
மறந்து நிற்குமோ
மற்(று) அவன் திறன்?'
என்றான்
மதலை.


[அல்லனேல் - அப்படி ராமன் போர்க்களத்தை விட்டுச் செல்லாதவனாயின்: மறந்து நிற்குமோ திறன் — தன் திறமையை மறந்து பதில் ஒன்றும் செய்யாமல் சும்மா இருப்பனோ. மதலை - மகன்; (இங்கே) ராவணபுத்திரன்.]

ராமன் போர்க்களம் துறந்து நீங்கியதற்கு அச்சம்தான் காரணமாக இருக்க வேண்டும் என்பதை இந்திரஜித்து வெளிப்படையாகச் சொல்லவில்லை: 'எந்த உயிரும் தற்காப்பு நியமத்தை மேற்கொண்டு ஒழுகுவது இயற்கை தானே' என்பது போலப் பேசி, அந்த நியமம் ராமன் உள்ளத்திலும் கலக்கம் விளைத்திருக்கக் கூடும் என்பதைத் தான் குறிப்பாகக் காட்டுகிறான்.

இந்திரஜித்தின் இந்தச் சமாதானம், இந்த மாயப் பேச்சு, ராவணனை அச்சமயம் திருப்தி அடையச் செய்கிறது.

'அன்ன தே' என
அரக்கனும் ஆதரிந்(து)
அமைந்தான்;
சொன்ன மைந்தனும்
தன்பெருங் கோயிலைத்
தொடர்ந்தான்;
மன்னன் ஏவலின்
மகோதரன் போயினன்;
வந்தான்
என்னை யாளுடை
நாயகன், வேறிடத்-
திருந்தான்.

[அன்னதே - அப்படித்தானிருக்கும்: அமைந்தான் - மன அமைதி கொண்டான், மைந்தனும் - ராவண புத்திரனும். கோயில் — அரண்மனை. மன்னன் ஏவலின் - ராவணனுடைய ஏவலினால்.]



கொள்ளிக் கட்டையை ஜொலிக்கச் செய்து பந்தமாகப் பிடித்துக் கொண்டு இருட்டிலே வழி காண்பதுண்டு. 'டார்ச்சு லைட்' கண்டு பிடிப்பதற்கு முற்பட்ட காலத்திலே. தீப்பந்தமும் கையுமாக இருட்டிலே, போகிறவர்களைச் சர்வ சாதாரணமாகப் பார்த்திருக்கிறான் கவிஞன்.

அந்த மாதிரி ஆக்நேயாஸ்திரத்தை (அக்கினி பகவானுக்கு உரிய அஸ்திரத்தை க் கையில் கொண்டு ராமன்,

அள்ளி நுங்களாம்
ஆரிருட் பிழம்பினை
அழித்தான்.

[அள்ளி நுங்கலாம் — அள்ளி விழுங்குவதற்கு உரியது போலத் திரண்டிருந்த. ஆரிருள் பிழம்பினை—போக்குதற்கு அரிய இருளின் திரட்சியை.]

என்று கற்பனை செய்கிறது கவிஞனது மனோபாவம்.

களத்திலே கிடக்கும் வானரத் தலைவர்களைத் தனித்தனியாக பார்க்கிறான் ராமன். முதல் முதல் சுக்கிரீவனைப் பார்க்கிறான்; பெருமூச்சு விடுகிறான்.

பக்கத்தில் அனுமன் கிடப்பதைப் பார்க்கிறான்; கண்ணீர் வந்து விடுகிறது.

தன்னைத் தானே நொந்து கொள்கிறான். தேவர் முதலியோரின் வரங்களும், முனிவர் ஆசிகளும், ஞானிகி வாழ்த்தும் அனுமனுக்குப் பயன்படாமல் போய் விட்டனவே. அதற்குத் தன்னுடைய தீவினைதான் காரணம் என்று தன்னைத் தானே வெறுத்துக் கொள்கிறான்.

'அரசை விரும்பியதால் என் தந்தையைக் கொன்றொழித்தேன்: தந்தை முறையான ஜடாயுவையும் என்பொருட்டாக இழந்தேன். இன்று இத்தனை வீரர்களையும் இழந்து விட்டேன். என்னுடைய வன்மைக்கு வரம்பும் உண்டோ?' என்று புலம்புகிறான்.

அங்கதனைப் பார்த்ததும் பிரலாபம் அதிகரிக்கிறது:

விடைக்குலங்களின்
நடுவண் ஓர் விடைகிடந்
தென்னக்,
கடைக்கண் தீயுக,
அங்கதக் களிற்றினைக்
கண்டான்;
படைக்கலங்களைச்
சுமக்கின்ற பதகனேன்
பழி பார்த்(து)
அடைக்கலப்பொருள்
காத்தவா(று) அழகி(து)!'
அழுதான். என்(று)

[விடைக் குலங்களின் நடுவண்—காளை மாடுகளின் கூட்டங்களுக்கு நடுவிலே. ஓர் விடை — ஒரு காளை. கிடந்தென்ன— கிடந்தாற் போலக் கிடக்கின்ற. அங்கதக் களிற்றினை — அங்கதன் என்ற சிறந்த வீரனை. தீ உக — தீ வெளிப்பட. பதகனேன் — பாவியாகிய நான். பழி பார்த்து — எனக்கே பழி யுண்டாகப் பார்த்து, காத்தவாறு — காத்த வகை. அழகிது — அழகியது; அழகாயிருக்கிறது.]

அங்கதனைப் பார்த்ததும் சோகத்தோடு கோபமும் சேர்ந்து பொங்குகிறது. கண்கள் நீரோடு நெருப்பையும் சிந்துகின்றன.

வாலி இறக்கும் போது 'இந்த என் பிள்ளையை உனக்கே அடைக்கலமாக ஒப்புவிக்கிறேன்' என்று சொன்னானல்லவா? அந்தக் காட்சி அப்படியே நினைவிற்கு வந்து விடுகிறது அங்கதன் கிடப்பதைக் கண்டதும்.

அந்த அங்கதன் தான் எவ்வளவு பக்தியுடன் பணிபுரிந்து வந்திருக்கிறான்! 'அனுமன் இல்லை யென்றால் அங்கதன்' என்று ராமலட்சுமணர் நம்பும்படி நடந்து கொண்டவனல்லவா?

அங்கதன் தூது போய் வந்த அந்த நிகழ்ச்சியைத் தான் மறக்க முடியுமா? ராமபாணம் போலப் போய் ராமபாணம் போலத் திரும்பி வந்தானல்லவா?

ராமனுக்கு அவன் பாணம் போல் தனி விருப்பம் தனி நோக்கம் இன்றி நடந்து கொண்டவனைக் காப்பாற்ற முடியாதவன் என்ற பரிதாப நிலையும் தோன்ற,

படைக்கலங்களைச்
சுமக்கின்ற பதகனேன்!

என்று ராமன் தன்னைத்தானே வெறுத்துக் கொள்வதில் ராமனுடைய உள்ளம் அப்படியே புலனாகிறதல்லவா?

அழகன் அழுதான், 'என் வீரம் அழகியது!' என்று.

காவியத்துள் ஒரு வீர காவியம்

ஒளி எங்கே?

பி. ஸ்ரீ

10

அந்தப் பயங்கரமான இருட்டிலே, அக்கினி-அஸ்திரம் என்ற அந்தக் கொள்ளிக் கட்டையின் பயங்கர வெளிச்சத்திலே, அதிபயங்கரமான போர்க் காட்சிகளுக்கிடையே வானரத் தலைவர்களைத் தனித் தனி நோக்கிப் பரிதவித்த ராமன் தம்பியைக் காண்கிறான். உடலிடம் எங்கும் பொத்திய அம்புகள் தொகுதியாக ஒளி வீச, இரத்த வெள்ளத்திலே பிணங்கள் மீது உறங்குபவன் போலக் கிடக்கும் லட்சுமணனைக் கண்டதுமே நடுங்கி இடியுண்ட ஒரு மராமரம் போலச் சாய்ந்து விடுகிறான்.

ஒரு நாழிகை நேரம் மூர்ச்சித்துக் கிடக்கிறான், தம்பியைத் தழுவிய வண்ணம், அப்படித் தழுவிக் கொண்ட கைகளை எடுப்பவரும் இல்லை; ராமனைத் தேற்றுபவருமில்லை. பிறகு தான் ராமன் கண் விழித்துத் தம்பியை நன்றாகப் பார்க்கிறான். 'இறந்தான்' என்று தெளிகிறான், புலம்புகிறான்.

ஒரு திறவுகோல்

இந்தப் புலம்பலைப் பதினைந்து கவிகள் வருணிக்கின்றன. இந்தப் புலம்பலில், லட்சுமணனைப் பற்றி ராமனுடைய மனக் குகையில் மறைந்திருந்து கம்பன் கவிதையில் இதுவரை வெளிப்படையாகப் புலப்படாமலிருந்த கருத்துக்களையும் காண்கிறோம். ராமகுணாசயத்தையும் லட்சுமண குண சித்திரத்தையும் ஒருங்கே திறம் பெறச் செய்யும் கருத்துக்கள்.

தந்தை இறந்ததைக் கேள்வியுற்ற பின் லட்சுமணனைப் பார்க்கும்போதெல்லாம் 'என் தந்தை இறக்கவில்லை' இன்னும் இருக்கிறான்!' என்றே ராமன் எண்ணுவதுண்டாம். என்ன அதிசய உணர்ச்சி பாருங்கள்! லட்சுமணன் ராமனுக்குத் தன்னைப் பணியாளனாக நினைத்திருக்க, ராமன் தம்பியைத் தந்தை போல்—அதாவது தந்தை செய்யும் உதவிகளையெல்லாம் செய்பவனாக—எண்ணியிருந்தானும்.

தந்தையாக மட்டுமா நினைந்திருந்தான் ராமன் லட்சுமணனை? தாயாகவும் சேயாகவும், தவமாகவும் செல்வமாகவும் மதித்திருந்தானாம்.

தாயோ நீயே;
தந்தையும் நீயே;
தவம் நீயே;

சேயோ நீயே;
தம்பியும் நீயே;
திருநீயே!

[சேய்-குழந்தை. திரு-செல்வம்.]
என்று புலம்புவதைக் கேளுங்கள்,

வருஷக் கணக்காகக் காட்டிலே சஞ்சரித்து வந்த காலத்தில் தாய் குழந்தையைப் போஷிப்பது போல் அல்லவா லட்சுமணன் ராமனை ஊட்டிப் பாதுகாத்து வந்தான்?

வெயில்என்(று) உன்னாய்;
நின்று தளர்ந்தே
மெலிவெய்தித்

துயில்கின் றாயோ?
இன்(று)இவ் வுறக்கம்
துறவாயோ?

[உன்னாய்-கருதாத நீ. மெலிவு எய்தி—மெலிவடைந்து.]

என்று தாயை இழந்த சேய் போலவே புலம்புகிறான் ராமன்.

ராமனுக்காக லட்சுமணன் தாயையும் தந்தையையும் மனைவியையும் சுற்றத்தையும் மற்றுமுள்ள எதையும் துறக்கத் துணிந்தவன் என்பது பிரசித்தம். ' அண்ணனுக்காக இந்தத் தம்பி அறத்தையும் கூடத் துறக்கத் துணிந்து விடுவானோ?' என்று கூட நம்மைப் பிரமிக்கச் செய்கிறது லட்சுமண குணாதிசயம். இந்தக் குணாதிசய மர்மத்தையும் ராமனின் புலம்பல் தொட்டுக் காட்டுகிறது.

' அறம்தாய் தந்தை
சுற்றமும் மற்றும்

எனை அல்லால்
துறந்தாய் !'

என்ற வாக்கிலே.

லட்சுமணனுக்கு ராமன் வேறு, அறம் வேறு என்பதில்லை—ராமனே தர்மம், தர்மமே ராமன்! ராமனை அல்லாமல் தருமம் என்று வேறு ஏதோ ஒன்று உண்டென்று லட்சுமணன் நம்பியதில்லை;

ராமன் பலவாறு புலம்பித் தன்னை மறந்து துயில்வதுபோல் ஆவி உள்ளடங்கிக் கிடக்கிறான். தூதர்கள் ராவணனிடம் செய்தி சொல்லப் போகிறார்கள்.

பகை முடிந்தது !

சந்தோஷ மிகுதியால் இந்த ராட்சஸ தூதர்களுக்குப் பேசவும் நாக்கு எழவில்லையாம். ' என்ன செய்வது? என்ன சொல்வது?' என்று தெரியாமலே தடுமாறித் தத்தளிப்பவர்களை நோக்கி ராவணன்,

என்வந்தது நீர் ?

என்று அதட்டிக் கேட்கிறான்.

இந்த அதட்டலிலே அறிவுத் தெளிவு பெற்றவர்களாய்த் தூதர்கள் பதில் சொல்லுகிறார்கள்:

'நின்மைந் தன்தன்
நெடுஞ்சரத்தால், துணைவர்
எல்லாம் நிலம்சேரப்,

பின்வந் தவனும்
உயிரிழந்த பிழையை
நோக்கிப் பெருந்துயரால்

முன்வந் தவனும்
முடிந்தான்; உன் பகை போய்
முடிந்த(து)'எனமொழிந்தார்.

[நெடுஞ்சரத்தால்—நெடிய [பாணத்தினால்.]

இந்திரஜித்தின் பிரமாஸ்திரத்தால் வானரத் துணைவர்களெல்லாம் கீழே விழுந்து விட்டதைத் தெரிவித்தார்கள்; அதுதான் ராவணனுக்கு ஏற்கெனவே தெரியுமே;

பின்வந் தவனும்
உயிர் இழந்த பிழை

என்றார்கள்.

'அது எப்படிப் பிழையாகும்?' என்று ராவணன் சற்றுத் திகைத்திருக்க வேண்டும். 'அந்தப் பிழையை நோக்கிப் பெருந்துயரால் முன் வந்தவனும் முடிந்தான்' என்றதும், ராவணன் எப்படி நிமிர்ந்து எவ்வளவு ஆச்சரியமாக, ஆனந்தமாகச் செய்தி கேட்டிருக்க வேண்டும் !




'பின் வந்தவன் பிரமாஸ்திரத்தால் முடிந்தான்; முன் வந்தவன் பெருந்துயரால் முடிந்தான்' என்றார்கள்.

முன்வந் தவனும்
முடிந்தான் ; உன் பகைபோய்
முடிந்தது!

என்று தூதர் மொழிந்ததை ராவணன் அமுதமாகப் பருகியிருக்க வேண்டும்!

ராமன் சாவுதானே ராவணனுக்கு வாழ்வு? அறம் வாழ்ந்தால் அதர்மம் பிழைத்திருக்குமா? ஒளியும் இருளும் ஒருங்கே வாழ்வதுண்டா?

'தூதர்கள் பொய் சொல்ல மாட்டார்கள்!' என்ற எண்ணத்தினால் பொங்கி வழிகின்றது உவகை ராவணனுக்கு.

பொய்யார் தூதர்
என்பதனால், பொங்கி
யெழுந்த உவகையனாய்

என்று கவி கூறுவதால், 'ஒரு வேளை இந்தச் செய்தி பொய்யாகவே இருக்குமோ?' என்று கூட ராவணன் நினைத்துப் பார்த்திருக்கக் கூடும்.

ஆனால் இப்படி ராவணனிடம் பொய் சொல்லி அவர்கள் பிழைத்திருக்க முடியுமா? உடனே தூதர்களுக்குப் பரிசு கொடுக்கிறான்.



அவர்களுக்கு மட்டுமா, கண்டவர்களுக் கெல்லாம் பரிசுகளை வாரி வழங்குகிறுனும். பெற்றுக் கொள்பவர் வெறுப்படையும்படி வாரி வீசுகிறுனும் செல்வங்களை. அவ்வளவு மகிழ்ச்சிப் பைத்தியம் ராவணனுக்கு.

யானை மேல் முரசேற்றி 'பகை முடிந்தது!' என்ற அந்த வெற்றியை நகரமெங்கும் அறிவிக்கும்படி கட்டளையிடுகிறுன். எல்லாரும் எண்ணெய் தேய்த்துக் குளித்து — அதாவது மங்கள ஸ்நானம் செய்து விழாக் கொண்டாட வேண்டுமாம்.

மூளையே மூளை!

இந்த மகிழ்ச்சிப் பெருக்கிலே ராவணன் மூளையிலிருந்து புதிது புதிதாக உதிக்கின்றன நினைவுக் கதிர்கள். போர்க்களத்திலே எதிரிகளைப் போல் அரக்கர்களும் செத்துக் கிடக்கிறுர்களல்லவா? அந்தப் பிணங்களை யெல்லாம் கடலில் எறிந்து விட வேண்டுமென்று நினைக்கிறுன். அப்படியானுல் எதிரிகளின் பிணங்கள் மட்டுமே களத்தில் கிடந்து பகை முடிந்த வெற்றியைப் பிரமாதமாகப் பறைசாற்றிக் கொண்டிருக்குமல்லவா? இது ஒரு விசேஷ முன் யோசனையும் கூட என்பதை விரைவில் தெரிந்து கொள்வோம்.

இனி இந்த உத்தரவை யாருக்கு இடலாம்? உதிக்கிறது வேஞெரு சிந்தனைக் கதிர்.

'ஜனக உருக் கொண்டு ஜானகியை மயங்கச் செய்தவனே சரியான பேர்வழி' என்று நினைத்து மருத்தனைக் கூவியழைக்கிறுன். ராவண தோரணையில் கட்டளை பிறக்கிறது.

உத்தரவு பரம ரகசியமாக நிறைவேற்றப்பட வேண்டுமாம். இல்லா விட்டால் 'தலை போய் விடும்!' என்றுதானு சொல்லுகிறுன்?

'மூந்த நீ போய்,
அரக்கர் உடல் முழுதும்
கடலில் முடுக்கிடுமிவ

சிந்தை ஒரியப்
பிறர் அறியின், சிரமும்
வரமும் சிந்துவன்!' என்(று)

உந்த, அவன் போய்
அரக்கர் உடல் முழுதும்
கடலினுள் இட்டான்.

[மூந்த - முற்பட. முடுக்கிடு - விரைவாகப் போட்டு விடு. சிந்துவன் - சிந்திச் சிதறடித்து விடுவேன். உந்த - கட்டளையிட்டுத் தள்ள.]

ஏன் இந்த ஏற்பாடு? சீதை போர்க்களத்தைப் பார்க்கப் போகிறுள்; செத்துக் கிடக்கும் ராமலட்சுமணரைப் பார்க்கப் போகிறுள்! அரக்கர் எவரும் செத்துக் கிடக்கவில்லையே! — என்றும் போர்க்களத்தை அவள் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டுமாம். இது ராவணன் மூளையில் உதயமாகும் திட்டம்.

சீதை களம் காண்பது எப்படி? அவளை விமானத்தில் ஏற்றிப் போர்க்களத்துக்கு இட்டு வர வேண்டும் என்றும் கட்டளையிடுகிறுன் ராவணன். அந்தக் கட்டளைக் கிணங்க அரக்கியரும் சீதையைப் போர்க்களத்திற்குக் கொண்டு போகிறுர்கள்.

இருள் படர்கிறது

ராவணன் அரக்கியர்க்குக் கட்டளையிடுவதையும், அவர்கள் மகிழ்ச்சி—ஆரவாரம் செய்து கட்டளையை நிறைவேற்றுவதையும், அப்போது சீதையின் மனநிலையையும் இதோ பாருங்கள்;

'தெய்வ விமானத்-
திடை ஏற்றி, மனித்தர்க்(கு)
உற்ற செயல் எல்லாம்

தையல் காணக்
காட்டுமின்கள்; கண்டால்
அன்றித் தன் உள்ளத்(து)

ஐயம் நீங்காள்'
என்(று) உரைக்க, அரக்கர்
மகளிர் இரைத்(து) ஈண்டி

உய்யும் உணர்வு
நீத்தாளை நெடும்போர்க்
களத்தின் மிசை உய்த்தார்.

[தெய்வ விமானத்திடை — தெய்வத் தன்மையுள்ள விமானத்தின் மேல். மனித்தர்க்கு - மனிதர்களாகிய ராமலட்சுமணருக்கு, காட்டுமின்கள் — காட்டி விடுங்கள். இரைத்து—மகிழ்ச்சிப் பேராரவாரம் செய்து. ஈண்டி— நெருங்கி, உய்யும் உணர்வு—இனி நாம் பிழைத்திருப்போம் என்ற உணர்வு. நீத்தாளை—நீங்கிய சீதையை. நெடும் போர்க்களத்தின் மிசை—யுத்த களத்தின் மேலே. உய்த்தார்—சேர்த்தார்கள்.]

ராமன் மூர்ச்சித்து விழுந்த அதே பயங்கரமான இரவுதான் இன்னும் நீடிக்கிறது. சீதை யுள்ளத்திலும் இந்த இருள் படர்கின்றது. இந்த இருளைப் போக்கும் ஒளி எங்கே?